அருவியூர்

# நகரத்தார் குரல்

திங்கள் இரண்டுக்கு ஒன்று

ஆண்டு 26 - 158
பிலவ - பங்குனி


கல்வி பண்பாடு வளர்ச்சி இதழ்

மார்ச் 2022

41 வது

## கல்விக்காவலர்

சிறப்பிதழ்



**தெய்வத்திருவாளர்கள். சொ. தேனப்பன் செட்டியார் - சந்திரா ஆச்சி**

பூர்வீகம்: கிருங்காக்கோட்டை    குடிப்பட்டம்: கழுகக்கூருடையார்

பெற்றோர்கள் :

**தே. சொக்கன் செட்டியார் - மீனாட்சி ஆச்சி**

மாமனார்-மாமியார்:

**சின்னச்சாமி செட்டியார் - அழகு ஆச்சி**

வெளியீடு

அருவியூர் வடக்குவளவு நகரத்தார்

கல்வி வளர்ச்சிக் கழகம் (பதிவு)

பிரான்மலை




Guruji.S.RAJAKUMAR
Business Consultants
Devotional Advisor
+91 944 348 0007

#7, LIGHT HOUSE COMPLEX,
FOUR ROADS, SALEM - 636 009.
CELL : 98427 10545, 93677 10545

3A SANNITHANAM, P54 'VISAKA',
6TH AVENUE, ANNA NAGAR,
CHENNAI - 600 040.
Cell: 81444 10545

WOODLAND CIRCLE,
5, RAJA RAM MOHAN ROY ROAD,
RICHMOND CIRCLE,
BENGALURU - 560 025.
CELL : 90350 10545

MAHILVITHU MAHIL®
MAHA SANNITHANAM

gurusaranam5@gmail.com www.mahilvithumahil.com Google Play: Mahilvithu Mahil

RK.KANE MOZHI
Cell: 91591 10545

My DRESS CODE™
Just different. More unique..

SILK SAREES · FANCY SAREES · CHUDIDHAR · TOPS

mydresscodeslm@gmail.com /mydresscodeslm

My DESIGN STUDIO™
boutique style stitching

"We undertaking All type of Stitching Work"

❖ Aari Work ❖ Designer Blouse ❖ Customized Stitching

#221, SURYA NIVASS, MAIN ROAD,
OPP. JAIN TEMPLE,
SHANKAR NAGAR, SALEM - 636 007.

Mob. : 98428 10545
76676 10545

உ
நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியே எமது தலையாய குறிக்கோள்

**உதவுவோம்!** **பண்படுத்துவோம்!** **பாராட்டுவோம்!**

**பட்டம் பெற்றுத் தொழிலிற் சிறப்போம்!**

# அருவியூர் நகரத்தார் குரல்



**ஆண்டு 26**
**குரல்158**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து - குறள் 398

**மார்ச்-2022**
**பிலவ-பங்குனி**

**கழக நிர்வாகிகள்**

**தலைவர்**
செ. ஆசை அலங்காரம் - 96294 67287
**செயலாளர்**
மு. இராமலிங்கம் - 9943 01 7232
**பொருளாளர்**
சு. முத்து - 90430 10199

**நிர்வாகக் குழு**

**இணைத் தலைவர்கள்**
ஏ.பி. ஸேதுராமன் - 98422 89705
சொ. இராமனாதன் - 97155 100 0179
**உறுப்பினர்கள்**
சொ. இளங்கோவன் - 94434 54173
ச. பழனியப்பன் - 90257 87637
சே. தவசீலன் - 98439 91517
ரா. வினோத்குமார் - 90038 00417

**உள் தணிக்கையாளர் :** R. வினோத்குமார்
**Website Manager : S.S. Manian,** DCE., Pudukkottai
**website : www.avnsangams.co.in**

**குரல் ஆண்டு சந்தா : ரூ.120/-**
**குரல் ஆயுள் சந்தா : ரூ.1800/-**

**குரல் நிறுவிய ஆசிரியர்**
திரு.சொ. வைத்திலிங்கம்
தொடக்கம் : 1997
**கௌரவ ஆசிரியர்**
திரு. M.S. முருகப்பன்
தலைவர் அ.வ.ந. பொதுநலச்சங்கம்

**குரல் பதிப்பாசிரியர்**
திரு செ. ஆசை அலங்காரம்
**ஆசிரியர் குழு**
திரு செ. ஆசை அலங்காரம்
Dr. சூரியகலா குமார்
V. கணேசன்
மற்றும் கழக நிர்வாகிகள்

கடிதம், செய்திகள், படைப்புகள் இவற்றை
அனுப்ப வேண்டிய முகவரி :
அருவியூர் நகரத்தார் குரல்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளெக்ஸ் பின்புறம்,
பொன்னமராவதி,
புதுக்கோட்டை - 622 407.
avnkalvi@gmail.com
அலுவலக வாட்ஸ்அப் : 87783 55837



# தமிழ் புத்தாண்டு வாழ்த்து!!

மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண நாளன்று தமிழ் சுபகிருது ஆண்டு பிறக்கிறது. அன்றைய தினம் பிரதோஷம். நாம் சிவனை வழிபடும் சிவகோத்திர மரபினர். பெயரிலேயே சுபத்தை தாங்கியுள்ள சுபகிருது ஆண்டு உலக மக்களும், நம் சமுதாய மக்களும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று வாழ மங்கைபாகர் - தேனம்மை சுவாமிகளை வணங்கி வாழ்த்துகிறோம்.

**இவண்**

**அ.வ.ந.கல்வி வளர்ச்சிக் கழகம் மற்றும் குரல் ஆசிரியர் குழு**

# உள்ளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | தலைவர் சிந்தனை | 3 |
| 2. | 41-வது கல்விகாவலரின் வாழ்க்கை வரலாறு | 7 |
| 3. | 41-வது கல்விகாவலர் அறிமுகம் | 12 |
| 4. | பயன் தந்து வாழ்க | 13 |
| 5. | சென்னை சங்கத்தின் 32-ஆம் ஆண்டு குடும்ப விழா | 15 |
| 6. | நடராஜர் தன்னுடைய நடனத்தால் சிறப்பித்த ஐந்து திருத்தலங்கள் | 20 |
| 7. | 40-வது கல்விகாவலரின் தந்தை பற்றிய செய்திகள் | 23 |
| 8. | தாய் மொழியைப் போற்றுவோம் | 26 |
| 9. | 2021-22-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவித்தொகை | 30 |
| 10. | கொடுங்கள்.. அதைவிட பன்மடங்கு பெறுவீர்கள் | 32 |
| 11. | தமிழ்த் துறையில் நம்மவரில் முதல் பெண் தமிழ் முனைவர் | 34 |
| 12. | கல்விக்காவலர்கள் | 36 |
| 13. | வாசகர் குரல் | 38 |
| 14. | திருமணச் செய்திகள் | 40 |
| 15. | ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமணத் தகவல் மையம் | 41 |
| 16. | நம்மவர்கள் கவனத்திற்கு | 42 |
| 17. | 2020-21-ல் பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் | 44 |
| 18. | புதிய கல்விக்காவலர்கள் | 45 |
| 19. | மத்திய அரசுப் பணியில் நம்மவர் | 46 |
| 20. | அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக செயலாளர் தேர்வு | 48 |
| 21. | சிவபாதம் சேர்ந்தார் | 49 |
| 22. | மனமுதிர்ச்சி என்றால் என்ன | 50 |
| 23. | அ.வ.ந. சங்கம் திண்டுக்கல் | 51 |
| 24. | பொன்னமராவதி சங்க இளைஞர் பேரவை | 52 |
| 25. | சிவனேசன் கட்டுரைக்கு வரவேற்பு கடிதம் | 54 |
| 26. | குடும்ப ஒற்றுமை | 59 |
| 27. | பிரான்மலை மங்கை பாகர் கோயில் ஆறாம் திருவிழா | 60 |
| 28. | இதயத்தைக் காப்போம் | 61 |
| 29. | மகிழ்ச்சியாக வாழக் கற்போம் | 63 |
| 30. | பிரான்மலை வாழ்த்து | 64 |

தலைவர் சிந்தனை

**செ. ஆசை அலங்காரம்** B.Sc.,

தலைவர்

**மக்கள் சேவையே மகேசன் சேவை**



நகரத்தார் பெருமக்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கங்கள்.

கல்வி வளர்ச்சிக் கழகத்தின் திறன்மிக்க செயலாளராக சிறப்பாக செயல்பட்ட திரு சுப. செல்வம் அவர்களின் மறைவிற்குப் பின் அப்பொறுப்பிற்கான இடம் காலியாக இருந்து வந்தது. அக்காலியிடத்தை நிரப்புவதற்கான இடைத் தேர்தல் 13-02-2022 தேதி பிரான்மலை மங்கைநாயகர் மன்றத்தில் நடைபெறும் என தேர்தல் ஆணையர்கள் பொது நலச்சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் மற்றும் தணிக்கையாளர் திரு பொன். சிவஞானம் ஆகியோர்கள் மூலம் தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டு, அதன்படி அன்றைய தேதியில் நடைபெற்ற தேர்தலில் திரு மு. இராமலிங்கம் M.A., B.Lit., B.Ed. அவர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலும், என் சார்பிலும் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள திரு மு. இராமலிங்கம் அவர்கள் சிறந்த கல்வியாளர். உயர்ந்த பண்பாளர். தற்சமயம் அரசுப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். நமது கல்வி வளர்ச்சிக் கழகத்தில் பொருளாளர், செயலாளராக பணியாற்றிய அனுபவமிக்கவர். அவருடைய துணைவியார் திருமதி சே. இராமதிலகம் அவர்களும் வட்டார கல்வி அலுவலராக கல்வித்துறையில் பணிபுரிந்து வருகிறார். இவர்கள் இருவரும் கல்வியாளர்கள். கல்வியாளர் குடும்பத்திலிருந்து செயலாளராகச் சேவையாற்ற திரு மு. இராமலிங்கம் அவர்கள் முன் வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி

அளிக்கிறது. நான் அவரை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு பொன்னமராவதியில் சந்தித்த பொழுது, செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வருமாறு அழைப்பு விடுத்தேன். இறைவன் சித்தம் அதுவானால் அது நடக்கட்டும் என தெரிவித்த அவர் அப்பொழுது எனக்கு எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. எது, எப்படியோ ஒரு ஆசிரியர் அதுவும் பணியில் இருப்பவர், அரசின் புதிய கல்விக்கொள்கையையும் அதன்படி பயிற்றுவித்தலையும், கலைகளையும் நன்கறிந்த இவர் நமக்குச் செயலாளராகக் கிடைத்திருப்பது நல்ல பல செயல்கள் தொடரவிருப்பதற்கான சமிஞ்ஞையாகவே கருதுகிறேன். அனைவருக்கும் கல்வி என்பது அரசின் கல்விக் கொள்கை யாகும். நமது கல்வி வளர்ச்சிக் கழகத்தின் நோக்கமும் அதுவேயாகும். நமது இன மாணவ. மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்குப் புதிய பல திட்டங்களை அவர் வழங்குவார். அதன்மூலம் நம் மாணவச் செல்வங்களின் கல்வி மேம்படும் என நம்புகிறேன்.

நம் நகரத்தார்களின் நீண்ட கால கனவையும், விருப்பத்தையும் நிறைவேற்றும் பொருட்டு நம்மவர்களின் செய்திகளை வழங்கிட “நகரத்தார் குரல்” என்கிற பெயரில் திங்கள் இரண்டுக்கு ஒரு முறை மலரும் இதழாக அதனை வெளியிடலாம் என 1997-ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது. திரு சொ. வைத்திலிங்கம் அவர்களை அதன் ஆசிரியராக நியமித்து தயாரித்து வெளியிடலாம் எனவும், அதற்கான செலவுகளை எப்படி எதிர்கொள்வது என யோசித்து மலைத்த பொழுது அன்றைய கோவை நகரத்தார் சங்கத்தின் தலைவர் இறந்தும் இறவாப் புகழோடு வாழும் தெய்வத்திரு அ. கணேஷ் செட்டியார் அவர்கள் எங்கள் சங்க உறுப்பினர்களின் குரல் சந்தா தொகை முழுவதையும் எங்கள் சங்கமே ஏற்றுக் கொண்டு செலுத்த தயாராக உள்ளோம் எனவும், தேவையான விளம்பரங்களை சேகரித்துத் தருவதாகவும் அன்றைய தினத்தன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அறிவித்தார். அதன்பின் தொடர்ச்சியாக மற்ற சங்கங்களும் ஆதரவளிக்க முன் வந்தன. இவ்வாறாக அனைத்து

சங்கங்களின் பேராதரவோடு தொடங்கப்பட்ட நகரத்தார் குரல் பரிணாம வளர்ச்சிப் பெற்று பல நல்ல பயன்தரும் செய்திகளை கடந்த 23 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வருகிறது.

குரல் சந்தா வசூல் செய்யும் பொறுப்பை சங்க நிர்வாகிகள் ஏற்றுக்கொண்டு சந்தாத் தொகையை வசூல் செய்து கொடுத்தார்கள். சிலர் நேரடியாகச் சந்தாவை செலுத்தி வந்தார்கள். சில சங்கங்கள் தங்கள் உறுப்பினர்கள் அனைவருக்குமான மொத்த சந்தாத் தொகையையும் செலுத்தி எங்களின் வேலைப் பளுவை குறைத்ததோடு தங்கள் உறுப்பினர்களிடமும் பாராட்டைப் பெற்றனர். ஆனால் இன்றைய நிலை முற்றிலும் மாறி வருகிறது.

2022-ஆம் ஆண்டிற்கான சந்தா வசூலில் தாமதம் ஏற்பட்டதால் கடந்த ஆண்டு சந்தா செலுத்திய அனைவரும் சந்தாவை செலுத்தி விடுவார்கள் என்ற நம்பிக்கையில் இவ்வாண்டிற்கான ஜனவரி மாத இதழ் தயாரிக்கப்பட்டு கடந்த ஆண்டு சந்தா செலுத்திய அனைவருக்கும் குரலை அனுப்பி வைத்துள்ளோம். தங்களுக்குரிய பணிகளோடு இச்சமுதாய பணியையும் மேற்கொண்டு குரல் சந்தா தொகையை சங்கங்கள் வசூல் செய்தோ அல்லது சங்கங்களே செலுத்தியோ குரல் இதழுக்கு அனைவரும் உதவியாய் இருந்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன். இதனை எங்களின் நேரடி வேண்டுகோளாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு தங்களின் சக்திக்கும், வசதிக்கும் ஏற்ப பலரும் பல ஆண்டுகளாக நன்கொடைகள் வழங்கி வருகிறார்கள். அவர்கள் வழங்கி வந்த நன்கொடைகள் மூலமே மாணவர்களுக்கு உதவித்தொகை, பரிசளிப்பு, பாராட்டு என அனைத்தும் நடைபெற்று வருகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். தற்சமயம் பலர் தொடர்ந்து வழங்காமல் இருப்பது வருத்தமளிக்கிறது. பல கைகள் தட்டினால்தான் ஓசை எழும். அதே போல் பலரும் நன்கொடைகள் வழங்கினால்தான் கல்வி வளர்ச்சிக் கழகப் பணிகள் அனைத்தும் தங்கு தடையின்றி நடைபெறும். கடந்த

காலங்களில் நன்கொடைகள் வழங்கி வந்த அனைவரும் தாமதமின்றி உரிய காலத்தில் தாங்கள் வழங்கி வந்த நன்கொடைகளை கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

நமது சமுதாயத்திற்கு சேவை செய்ய வருபவர்களுக்கு ஒத்துழைப்பு தாருங்கள். அவர்களுக்கு உறுதுணையாக நில்லுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். நம் சமுதாயம் வளர அனைவரும் ஒருமித்த கருத்தோடு செயல்படுவோம்.

நம் சமுதாய முன்னேற்றமே நமது குறிக்கோள். அதற்கு கல்வி மிகவும் அவசியம். கல்வி வளர, சமுதாயம் வளரும். இந்த இலக்கை நோக்கிப் பயணிப்போம்! சிகரத்தை எட்டுவோம்! சாதனைகள் பல படைப்போம்! நம் சமுதாயத்திற்கு பெருமை சேர்ப்போம்.

வாழ்க நம் சமுதாயம்! வளர்க நம் ஒற்றுமை!!


உ
சிவமயம்
உடல் நலம் பேணுவோம்! உளம் மகிழ வாழ்வோம்!!

**கார்த்திக் மெடிக்கல்ஸ்**

காந்திபார்க், கோவை

**காமாட்சி பார்மஸி**


சுக்ரவார்பேட்டை, கோவை
செல் : 95144 52521


எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்

S. கிருஷ்ணசாமி
K. பானுமதி

K. மீனாட்சி B.E.
K. மோகனசுந்தரி B.E.
K. கார்த்திக் B.Sc.,

# 41-வது
# கல்விகாவலரின் வாழ்க்கை வரலாறு



இந்த மாத அட்டைப் படத்தை அலங்கரிக்கும் 41-வது கல்விகாவலர், கோவை தேனப்பன் செட்டியார் - சந்திரா ஆச்சி தம்பதியினர். இவர்கள் இருவரும் தெய்வநிலையில் வாழ்கிறார்கள். இவர்கள் இருவரும் எளிய வாழ்க்கையின் அழகையும், கடின உழைப்பின் பெருமையையும் வெளிப்படையாய் உலகிற்கு காட்டும் சின்னமாக விளங்கினார்கள். உண்மை, நேர்மை, வாய்மை ஆகிய நற்பண்புகளின் உறைவிடம். வறுமையிலும் செம்மை என்பதற்கு அடையாளமாக வாழ்ந்தவர்கள். சிக்கனம் என்பது நமது சமுதாயத்தில் அடையாளம். அந்த நற்குணம் இவர்களிடம் மிகுதியாய் இருந்தது.

கிருங்காக்கோட்டை கழூகக்கூருடையார் தே. சொக்கன் செட்டியார் - மீனாட்சி ஆச்சி தம்பதியினரின் மகன், சொல் செயல் என அனைத்து விசயங்களிலும் இன்றைய நமது கல்விக்காவலர் தேனப்பன் அவர்கள் தேனாய் தித்திப்பவர். இவரின் இல்லாள் சந்திரா ஆச்சி அவர்கள் சிறுகுடி (மேலூருடையார்) நடுக்கடை செட்டியார் என மக்களால் அன்போடு அழைக்கப்படும் சாந்தமே உருவான சின்னச்சாமி செட்டியார் - அழகு ஆச்சி தம்பதியினரின் மகளாவார். இவர் கள்ளம் கபடமற்ற மாசுமருவற்ற பால் மனம் கொண்ட முழுமதி போன்றவர். அனைவரையும் பாகுபாடின்றி நேசிக்கும் இவர்களுக்கு சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி இன்பமாய் மணவாழ்க்கை வாழ்ந்தாலும் இவர்களுக்கு குழந்தைச் செல்வம் இல்லை என்கிற ஏக்கம் ஒருபுறம் இருந்தது. இருந்த போதிலும் நீ ஒரு குழந்தை, நான் ஒரு குழந்தை

என்பதற்கேற்ப ஒருவரை ஒருவர் குழந்தையாய் பாவித்து தங்களின் இல்லற வாழ்க்கையை இனிமையாக மாற்றிக் கொண்டு வாழ்ந்த நல்ல தம்பதியினர்.

கல்விகாவலர் தெய்வத்திரு சொ. தேனப்பன் செட்டியார் அவர்களின் சகோதரர்கள் திரு சொ. பழனியப்பன் செட்டியார், திரு சொ. சுப்பையா செட்டியார், திரு சொ. ஞானம், சகோதரி திருமதி அழகுமீனாள் சிவலிங்கம்.

கல்விகாவலர் தெய்வத்திருமதி சந்திரா ஆச்சி அவர்களின் சகோதரர்கள் திரு. காசி அலங்காரம் செட்டியார், திரு. தர்மலிங்கம் செட்டியார், திரு. ராமசாமி செட்டியார், சகோதரி திருமதி சீதாலெட்சுமி ஆச்சி.



கல்விகாவலரின் சிறுவயது புகைப்படம்

சுமார் 40 வருடங்களுக்கு முன்பு பிழைப்புத் தேடி கோவைக்குச் சென்ற இவர்கள் தினக்கூலிகளாக உழைத்து தங்களுக்கு கிடைத்த சொற்ப வருமானத்தில் சிறுக சிறுகச் சேர்த்த பணத்தை சிக்கனப்படுத்தி சிறப்பாக வாழ்ந்து வந்தனர். தங்களுக்கொரு குழந்தை இருந்தால் நன்றாகப் படிக்க வைத்திருப்போம். அந்த பாக்கியத்தை நமக்கு வழங்கி நம்மை ஒரு சிறிய வட்டத்தில் அடைக்க விரும்பாத இறைவன் நம் சமுதாயத்தில் நம்மைப் போன்ற ஏழைக் குடும்ப குழந்தைகளின் கல்விக்கு உதவிட வேண்டும் என்கிற உயர்ந்த தர்மத்தை செய்திட இறைவன் பணித்துள்ளார் என எண்ணி மகிழ்ந்தார்கள். அந்த எண்ணத்தின் வெளிப்பாடே இன்றைக்கு நமக்கு 41-வது கல்விகாவலர் கிடைத்த வரலாறு. காட்டிய அன்பரைப் பற்றியும் அவர் எப்படி இந்தக் காட்சியில் வந்தார் என்பதைப் பற்றியும் பார்ப்போம்.

தெய்வத்திருமதி சந்திரா ஆச்சியின் ஒன்றுவிட்ட சகோதரர் கோவை கவி.கொ. கணேசன் அவர்கள். இவர் நமது கல்வி வளர்ச்சி கழகத்தின் வள்ளல். இவரின் புதுக்கவிதை புலமையை

கவிஞர் வைரமுத்து, திரைப்பட இயக்குநர் திரு SP. முத்துராமன் ஆகியோர்கள் பாராட்டி **கவி.கொ.** என்கிற பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளார்கள். இவரின் தாயார் ராஜம்மாள் ஆச்சியும், சந்திரா அவர்களின் தாயார் அழகு ஆச்சியும் உடன் பிறந்த சகோதரிகள். அந்த வகையில் ரத்த உறவு முறை கொண்ட கோவை கவி.கொ.கணேசன் அவர்களை தன் உடன்பிறப்பாக பாவித்து வந்தார். அவரும் தன் சகோதரி சந்திராவிற்கும் மைத்துனர் தேனப்பனுக்கும் தேவையான உதவிகளை பல காலமாக செய்து வந்தார். தேனப்பன் அவர்கள் இறந்துவிடவே சகோதரி சந்திராவின் வருத்தத்தையும், மனவேதனையையும் போக்கி ஆறுதல்படுத்தியும், மருத்துவம் உள்ளிட்ட அவரின் தேவைகளை தேவைப்படும் நேரத்தில் செய்து கொடுத்தும் வந்ததன் மூலம் அவர்மீது அன்பும், பாசமும், நம்பிக்கையும் பெருகிக் கொண்டே வந்தது. இந்தக் காலகட்டத்தில்தான் தன்னிடமுள்ள சேமிப்பு நிதியை தன் ஆயுள் காலத்திற்குப் பின் ஏழைக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்கிற தன் விருப்பத்தை தெரிவித்ததோடு, அந்த பொறுப்பையும் அவரிடமே ஒப்படைத்தார்.

**இதனை இவனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்**

என்ற குறளுக்கு ஏற்ப அந்தப் பொறுப்பை அவரிடமே ஒப்படைத்தார். இத்தருணத்தில் நான், தெய்வானை ஆச்சி, மீனாட்சி ஆச்சி சகோதரிகளுக்கும் இன்றைய நமது கல்விகாவலர் சந்திரா ஆச்சி அவர்களுக்கும் உள்ள ஒற்றுமையை நினைத்துப் பார்க்கிறேன். தெய்வானை ஆச்சி, மீனாட்சி ஆச்சி சகோதரிகள் இருவரும் சேர்ந்து 14 ஊர் நகரத்தார்களுக்கு மங்கைநாயகர் கோயில் காலசந்திக் கட்டளை தொய்வின்றி நடைபெற 03.07.1901-ம் தேதி எழுதி வைத்த தானப் பத்திரம் நினைவுக்கு வருகிறது. தங்கள் கணவன்மார்கள் ஆயுளுக்குப்பின்பு தங்களுக்கு வாரிசு இல்லாததால் இப்பத்திரம் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தானமாகக் கொடுத்த சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டுதான் மங்கைநாயகர் கோயில் காலசந்திக் கட்டளைக்கு படித்தரம் மற்றும் ஆறாம் திருவிழா உள்ளிட்ட திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருவதோடு நம் சமுதாயமும் வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை நாம் நன்றியுடன் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மீனாட்சி, தெய்வானை ஆச்சிமார்கள் தங்கள் கணவன்மார்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களைத் தானமாக வழங்கியுள்ளார்கள். ஆனால் நமது கல்விகாவலர் தனது உழைப்பால் கிடைத்த பணத்தை ஏழைக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குத் தானமாக வழங்கியுள்ளார்கள். ஒரு ஏழை அதிலும் அடித்தட்டு மக்களாக வாழ்ந்த இவரின் உயர்ந்த எண்ணத்தை நினைத்து மனம் நெகிழ்ந்து விட்டேன். மேலும் இதுவரை இணைந்துள்ள கல்விகாவலர்களில் ஓரிருவரைத்தவிர மற்ற கல்விகாவலர்கள் எல்லாம் தங்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய செய்திகளை தாங்களே தொகுத்து வழங்குவார்கள். நாம் அவர்களும், அவர்களின் குடும்பத்தார்களும் நலமோடும், வளமோடும் வாழ இறைவனை வேண்டி வணங்கி வாழ்த்திப் பாராட்டி கட்டுரை எழுதுவோம். ஆனால் இன்றைக்கு இணைந்துள்ள கல்விகாவலரின் கதையே வேறுவிதமாக மாறுபட்டு வித்தியாசமாக உள்ளது. உழைத்து உழைத்து ஓய்ந்த அவர்கள் இறைவனின் திருவடிகளில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். நம் சமுதாயத்தில் உள்ள ஏழைக் குழந்தைகள் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என விண்ணிலிருந்து வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

**“அன்னசத்திரம் ஆயிரம் கட்டல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்ன யாவினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”**

என்பதற்கேற்ப இறைவனுக்கு செய்யும் தொண்டைவிட,தர்மத்தை விட, உயர்ந்த தர்மமான ஏழைக்கு எழுத்தறிவிக்கும் தர்மத்தைச்

செய்ய இவர்கள் இறந்தாலும், இறவாப்புகழோடும், மறைந்தாளும் மங்காப்புகழோடும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**"இருந்தாலும் இறந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்**
**இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்"**

என்கிற கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகளுக்கு எற்ப வாழ்ந்து மறைந்தாலும் நம் சமுதாய வரலாற்றில் ஒரு புதுமையைச் செய்த இவர்கள் நமது சமுதாய ஏழை மாணவர்களின் உள்ளங்களில், இல்லங்களில் என்றென்றும் வாழ்ந்து கொண்டு இருப்பார்கள். இதுபோன்ற சிந்தனை யாளர்கள் இருப்பதால் தான் நமது சமுதாயமும் கல்வி வளர்ச்சிக் கழகமும் வளர்கிறது. நமது சமுதாயத்தில் கல்வியும் வளர்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

வாழ்க! தேனப்பன் சந்திரா தம்பதியினர்
வளர்க! அவர்களின் புகழ்!

உ
சிவமயம்

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.

**அரசு மெடிக்கல்ஸ்**
**வெள்ளி விழா கண்ட நிறுவனம்**

**எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்கும்**




**பஸ் ஸ்டாண்டு அருகில், பொன்னமராவதி. போன் : 260657**

# 41-வது கல்விகாவலர் பற்றிய அறிமுகம்

கிருங்காக்கோட்டை கழுகக்கூருடையார் குடிப்பட்டம் தே. சொக்கன் செட்டியார் - சொ. மீனாட்சி ஆச்சி இவர்களின் மகன் சொ. தேனப்பன் செட்டியார். சிறுகுடி மேலூருடையார் குடிப்பட்டம் செ.சி. சின்னச்சாமி செட்டியார் - சி. அழகு ஆச்சி இவர்களின் மகள் தே. சந்திரா ஆச்சி.

இவர்கள் கோவை வடவள்ளியில் தங்கள் குடும்ப வாழ்க்கையை சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்து தங்களுடைய இறுதிக் காலம் வரை வடவள்ளியிலேயே வாழ்க்கை நடத்தினார்கள். வாழ்க்கையில் சிரமங்கள் பல அடைந்தாலும் சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கேற்ப தங்களின் சிறுசேமிப்பு பணத்தை இருவரின் மரணத்திற்குப்பின் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் ஒப்படைத்து கல்விக் காவலராக சேர்க்க விருப்பத்தை தெரிவித்து அப்பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்து இருந்தார்கள். உறுதியளித்த நானும் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளேன்.

குழந்தை இல்லா இத்தம்பதியினரின் சீரிய எண்ணம் உயர்வானதாகும் மற்றும் நம் சமுதாய குழந்தைகளின் கல்வி உதவிக்காக தங்கள் உழைப்பை அர்ப்பணம் செய்துள்ளார்கள் என்பதை நினைத்துப் பெருமையடைகிறேன். இத்தம்பதியரின் ஆன்மா என்றும் இறைவன் திருவடியில் இளைப்பாற வேண்டும் என இறைவனை வேண்டி வணங்குகிறேன்.

இருவரும் மரணத்தைத் தழுவிய போதிலும் என் இதயம் விட்டு விலகாது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை.

கண்ணீர் மல்க என்றும் உங்கள் நினைவில்
**ஞா. மீனா ஆச்சி, சிறுகுடி**
**கவி.கொ. ம.சி.கு.கு. கணேசன், கோவை**

# பயன் தந்து வாழ்க!



*உடன்பிறப்பே சந்திராவே!*
*உயர்வான நிலவே!*
*தொடராகும் எம்வாழ்வில்*
*தேனமுதம் நீதான்*

*அடக்கமுள்ள ஒளியாகி*
*அன்புதனைத் தந்தாய்!*
*இடர்வந்து குவிந்ததனால்*
*இன்னுயிரை ஈந்தாய்!*

*திடமாகக் கல்விக்கே*
*திரள்செல்வம் தந்தாய்!*
*உடலோய்ந்து மறைந்தாலும்*
*எம்முயிரில் வாழ்வாய்!*

*கடலலையும் உன்பேரை*
*கனிந்துரைக்கும் சந்திரா!*
*படமாக இல்லத்தில்*
*பயனாகி வாழ்க!*

அன்புத் தம்பி
என்றும் உன்நினைவில்
கண்ணீர் மல்க
**கவி.கொ. ம.சி.கு.கு. கணேசன்**
கோவை.



உ

ஸ்ரீநாகம்மாள் துணை

CELEBRATING 25 years

**24 ஜுன் 2022** (since 1997)

25ம் ஆண்டு

வெள்ளி விழா காணும்

ROINET Contac

# நாகா ஸ்டோர்ஸ்

கிராப்பட்டி, திருச்சி 620012

உரிமையாளர்கள்

**இராம. நாராயணன்**

**நா. ராம்குமார் - நா. விஸ்வநாதன்**

**அன்புள்ள கடைக்காரர்கள் கவனத்திற்கு**

1. மணி டிரான்ஸ்பர் அனைத்து வங்கிகளுக்கும் உடனடியாக பணம் அனுப்பலாம்.
2. பணம் எடுக்கலாம்
3. ஆதார் கார்டு மூலம் பணம் எடுக்கலாம்.
4. மின்சார கட்டணம் கட்டி தரலாம். கமிஷன் உண்டு
5. இன்னும் மேலும் பல வசதிகள் உள்ளன.

தொடர்புக்கு : **ROINET DISTRIBUTORS N. VISWANATHAN**

**CELL : 7373 123 111**

# சென்னை சங்கத்தின் 32-ஆம் ஆண்டு குடும்ப விழா

26-12-2021 ஞாயிறு அன்று அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சென்னை சங்கத்தின் 32-ஆம் ஆண்டு குடும்ப விழா T. நகர் ஸ்ரீ பாலாஜி திருமண மண்டபத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

காலை 8.30 மணியளவில் விளக்கு பூஜை ஆரம்பமானது. சென்னை சங்கத் தலைவர் திரு M.முருகானந்தம் (எ) வெற்றிவேல் முருகன் மற்றும் நிர்வாகிகள், பொதுநலச்சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் மற்றும் செயலாளர் திரு மு. சாமிநாதன் மற்றும் இளைஞர் பேரவை நிர்வாகிகள் மகளிர் குழு பிரதிநிதிகள் குத்து விளக்கு ஏற்றி வைக்க நமது நகரத்தார் இல்லத்தரசிகள் வரிசையாக விளக்கேற்றி மங்கைபாகர்-தேனம்மையைப் போற்றிப் பாடி விளக்குப் பூஜையை மிகச் சிறப்பாக முடித்தனர்.

அடுத்ததாக கோலப்போட்டி நடந்தது. 30 ஜோடிகளுக்கு மேல் பெண்கள் சேர்ந்து வண்ணக்கோலங்கள் வரைந்ததுடன் 2022 புத்தாண்டு வாழ்த்துக்களையும் கூறியிருந்தது பெருமையாக இருந்தது.

சென்னை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தில் இரண்டு முறை பொருளாளராகவும், ஒரு முறை செயலாளராகவும் இருந்து சங்கப் பணியாற்றிய தெய்வத்திரு சுப. செல்வம் அவர்கள் மற்றும் சென்னை A.V.N. சங்கத்தில் 2 முறை செயலாளராகவும், ஒருமுறை பொருளாளராகவும் இருந்து சங்கப் பணியாற்றிய தெய்வத்திரு T. சரவணன் ஆகிய இருவருடைய உருவப்படத்தையும் பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்களும், சென்னை சங்கத் தலைவர் திரு M. முருகானந்தம் (எ) வெற்றிவேல் முருகன் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

தெய்வத்திருவாளர்கள் சுப. செல்வம், T. சரவணன் மற்றும் கொரோனா பிடியில் இறந்த நம் நகரத்தார்களுக்காக விழாவில் மண்டபத்தில் இருந்த அனைவரும் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி அவர்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்தனர்.

காலை சிற்றுண்டிக்கு முன்பு சென்னை A.V.N. சங்கத் தலைவர் அழைப்பை ஏற்று தேசிய செட்டியார் பேரவையின் நிறுவனர் திரு PL.A. ஜெகநாத் மிஸ்ரா அவர்கள் குடும்பத்துடன் வந்து நமது குடும்ப விழாவில் கலந்து கொண்டார்கள். நமது நகரத்தார்களிடம் மேடையில் பேசும் போது, அனைத்து செட்டியார்கள் ஒற்றுமை மிகவும் முக்கியம். அனைவரும் ஒன்றுபடுவோம் என்று தெரிவித்து சென்னை சங்க குடும்ப விழா சிறப்படைய வாழ்த்தி விடைபெற்றார்கள்.

காலை 11.00 மணியளவில் பொதுக்குழுக் கூட்டம் ஆரம்பமானது. சென்னை சங்கத் தலைவர் திரு M. முருகானந்தம் (எ) வெற்றிவேல் முருகன் அவர்கள் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் திரு R. சோனாராம் அவர்கள், பொருளாளர் திரு V. இராமநாதன் அவர்கள் மற்றும் நிர்வாகிகள் பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்கள், செயலாளர் திரு மு. சாமிநாதன், கல்வி வளர்ச்சிக் கழகப் பொருளாளர் திரு சு. முத்து மற்றும் அறங்காவலர் திரு செந்தில்குரு, மகிழ்வித்து மகிழ் குருஜி திரு S. ராஜகுமார், திருச்சி திரு கே. சிவநேசன் அவர்களும் கலந்து கொண்டார்கள். சென்னை அ.வ.ந. சங்க இளைஞர் பேரவைச் செயலாளர் திரு TN. சுரேஷ்ராம் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாத் தலைவர் தமது உரையில் சென்னை சங்க 32-வது குடும்பவிழா ஏற்பாடுகள் சிறப்பாக அமைத்துள்ளதற்கும், ஆண்டுதோறும் நிர்வாகிகள் ஆலோசனைப்படி இளைஞர் பேரவை நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் சிறப்பாக பணி செய்வதையும் பாராட்டினார். விழாவிற்கு திரளாக வந்து சிறப்பிக்கும் நமது சென்னை நகரத்தார் ஆதரவுக்கு நன்றி கூறினார்கள். துணைத்தலைவர், திரு MS. ராஜேஷ் அவர்கள்



சென்னையில்

# HEALTHCARE PHARMA

## இனிய ஆரம்பம்

அன்புடையீர், வணக்கம்.

நமது AVN உறவுகள் அனைவருக்கும் ஓர் நல்ல செய்தி. அருள்மிகு மங்கைபாகர்-தேனம்மை ஆசியுடன் கடந்த குரலில் வெளியிட்டபடி நமது மெடிக்கல் மொத்த வணிகத்தை கீழ்க்கண்டவாறு வடிவமைத்துள்ளோம்.

சென்னையில் வருகிற சுபகிருது வருடம் சித்திரை மாதம் 31-ஆம் நாள் 14.5.2022 சனிக்கிழமை, அதிகாலை 4.30 மணிக்கு **HEALTHCARE PHARMA** என்ற பெயரில் கணபதி பூஜை செய்து ஆரம்பிக்க உள்ளோம்.

இது சம்பந்தமாக நம்மவர்கள் முதலீடு செய்யும் விவரங்கள் பற்றி சென்ற இதழில் விரிவாகத் தெரிவித்திருந்தோம். இதில் கலந்து கொண்டு முதலீடு செய்ய அனைவரையும் அழைத்திருந்தோம். இது ஒரு பொது நிர்வாகமாக நடத்தப்படும். தங்களுடைய விருப்பத்தையும், பங்களிப்பையும் வருகின்ற 31-03-2022-க்குள் உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இதுவரை உறுதி செய்தவர்கள் விபரம்:**

**திருவாளர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | K. சிவநேசன் | திருச்சி | 5,00,000 | ஐந்துலட்சம் |
| 2. | M. முருகானந்தம் | சென்னை | 5,00,000 | ஐந்துலட்சம் |
| 3. | G. ரவிக்குமார் | திண்டுக்கல் | 5,00,000 | ஐந்துலட்சம் |
| 4. | AP. ஸேதுராமன் | கோவை | 5,00,000 | ஐந்துலட்சம் |
| 5. | K. கங்காதரன் | சென்னை | 1,00,000 | ஒருலட்சம் |
| 6. | Dr. P.S. ஸ்ரீகுமார் | கோவை | 1,00,000 | ஒருலட்சம் |
| 7. | CA. ராஜாத்தி .S | கோவை | 1,00,000 | ஒருலட்சம் |
| 8. | S. ஜெயா | திருச்சி | 1,00,000 | ஒருலட்சம் |
| 9. | S.N. ராஜகோபாலன் | திருச்சி | 1,00,000 | ஒருலட்சம் |
| 10. | M. இளவரசன் | கோவை | 1,00,000 | ஒருலட்சம் |
| 11. | P.V. கண்ணன் | சென்னை | 1,00,000 | ஒருலட்சம் |
| 12. | K. ராம்குமார் | சென்னை | 1,00,000 | ஒருலட்சம் |
| 13. | RP.மகிழன் | சென்னை | 1,00,000 | ஒருலட்சம் |
| 14. | N. திருநாவுக்கரசு | பொன்னமராவதி | 1,00,000 | ஒருலட்சம் |
| 15. | C. பரமசிவம் | திண்டுக்கல் | 1,00,000 | ஒருலட்சம் |

**அடுத்த பெயர்....? ஆமாம் அடுத்தது உங்கள் பெயர் தான்**

தொடர்புக்கு

**K. சிவநேசன்** Mob: 98424 - 73497, 73730 - 73497

**M. முருகானந்தம் @ வெற்றிவேல் முருகன்** Mob: 98406 - 23635, 94443 - 64466


உ
அருள்மிகு மங்கைபாகர் தேனம்மை துணை
சித்ரா தனபால் அன்பகம்
புதுமனை புகுவிழா
எண்-30, ஸ்ரீ வாலீஸ்வரர் கார்டன், அட்லான்டிக் நகர்,
மதுக்கரை, கோவை.
தை மாதம் 7-ஆம் நாள் வியாழக்கிழமை (20-01-2022) அன்று
சுற்றமும் நட்பும் சூழ இனிதே நடைபெற்றது.
வாழ்த்திய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி,
சித்ரா தனபால், செல்வகுமார் தனபால் MBA.,

நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

**தலைமுறைகள் நீடித்து நிற்கும் கட்டிடங்களின் நம்பிக்கை**

ATC

# அன்பு வணிக நிலையம்

**அண்ணாசாலை, பொன்னமராவதி - 622 407.**

**போன்: 04333 262095 செல்: 94421 60385, 94434 13223**

**Texmo Industries**
Est. 1956
**டேரோ பம்புகள்**

மகத்தான அறுவடையின் ரகசியம்

Taro Pumps

GM
SWITCH TO A BETTER WORLD

NIPPON PAINT

ESSCO BY Jaquar GROUP

UltraTech CEMENT
The Engineer's Choice

Chettinad cement

RAMCO SUPERGRADE
As strong as family bonds.

AMMAN-TRY TMT BARS
500 guarD
கட்டிடங்களின் பாதுகாவலன்

SRI DURGA TMT

TNPL Cement
Give your building life long protection!

TATA TISCON SD
SUPER DUCTILE REBARS

Birla White
THE WHITEST WHITE CEMENT

FinOlex INDUSTRIES



பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்

- திருவள்ளுவம்

## நல்வாழ்த்துகளுடன்...

**DEEPA ERECTORS PRIVATE LIMITED**
No. 16/5, 1st Main Road, Ramakrishna Nagar,
Ernavoor, Chennai - 600057
mail to : depl@depltd.in

**PHOENIX OILFIELD SERVICES & CONTRACTING LLC**
P.O. BOX: 1151, WADI KABIR P.C. 117,
Sultanate of Oman.

*Specialists in :*

**Construction of Storage Tanks, Pressure Vessels, Pipelines and Blasting & Painting in India & Overseas**



R. Paramasivam B.E.,
***Managing Director***
Ph.: 9884660379



Pa. Mathivanan B.E.,
***Chief Executive Officer***
& A. Nivetha B.E., M.B.A.,
***Business Analyst***



Pa. Shankar B.E., M.S.,
(Sweden)
***Consultant***

ஆண்டறிக்கை வாசித்தார். சென்னை அ.வ.ந. சங்க செயல் திட்டங்கள் திரையிடப்பட்டு நகரத்தார்களுக்கு காட்டப்பட்டது. இந்த ஆண்டு விழாவின் சிறப்பு, பொருளாளர் திரு V. இராமநாதன் அவர்கள் வரவு செலவு விபரம் அறிவித்தார்கள்.

சென்னை A.V.N. சங்க தொழிற் வளர்ச்சிக் கழக வழிகாட்டுதலாக திருச்சி திரு கே. சிவநேசன் அவர்கள் குறைந்த முதலீட்டில் தொழில் செய்து வளர வழி குறித்து ஆலோசனை கூறியதுடன் திட்ட அறிக்கையை எல்லோருக்கும் வழங்கினார்கள். மகிழ்வித்து மகிழ் குருஜி S. ராஜகுமார் அவர்கள் "ஏ மனமே அதிகாலை சிந்தனைகள்" மற்றும் "வாஸ்து சாஸ்திரம்" என்ற 2 புத்தகங்கள் அவர்கள் சொந்தப் பதிப்பு எல்லோருக்கும் வழங்கினார்கள். துணைத் தலைவர் திரு R. சோனாராம் அவர்கள் சென்னை சங்க குடும்ப விழாவில் கலந்து கொள்வது ஒரு நல்ல வாய்ப்பாகவும் மகிழ்வாகவும் இருப்பதாகத் தெரிவித்தார்கள். பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்கள் தமது உரையில் சென்னை சங்கம் எப்பொழுதும் பொதுநலச் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருப்பதையும், கொரோனா ஊரடங்கு சமயத்தில் நலிவுற்ற நமது நகரத்தார்களுக்கு ரூ. 4.15 லட்சம் வரை வசூலித்து 43 ஊர்களில் சுமார் 275 நபர்களுக்கு நேரடியாக உதவித்தொகை வழங்கிய சென்னை சங்க நடவடிக்கையையும் பாராட்டினார். அந்த கொரோனா உதவித் திட்டத்தை சிறப்பாக செயல்பட்டு நடத்திய இளைஞர் பேரவைக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். செயலாளர் திரு மு. சாமி நாதன் அவர்களும் சென்னை குடும்ப விழாவைப் பாராட்டி பேசினார்கள்.

சென்னை வாழ் அருவியூர் தெற்குவளவு நகரத்தார் பிரதிநிதியாக டாக்டர் M.N. சங்கர் அவர்கள் (அக்குபஞ்சர் சிகிச்சையில் Ph.D., பட்டம் பெற்றவர்) விழாவில் கலந்து கொண்டு ஆரோக்கியமாக வாழ சுத்தமான தண்ணீர் உபயோகிக்கும் வழியைக் கூறி எல்லோரையும் வாழ்த்தி விடைபெற்றார்கள்.

பொதுக்குழுக் கூட்டத்தில் 2022-ம் ஆண்டுமுதல் 3 ஆண்டுகளுக்கு புதிய நிர்வாகிகளுக்கான தேர்தல்

அறிவிக்கப்பட்டது. பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்களும், செயலாளர் திரு மு. சாமிநாதன் அவர்களும் தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் குறித்த காலக்கெடுவுக்குள் புதிய விண்ணப்பம் ஏதும் வரவில்லை. அதனால் தொடர்ந்து திரு M. முருகானந்தம் (எ) வெற்றிவேல் அவர்களே தலைவராகவும், செயலாளராக திரு V. இராமநாதன் அவர்களும், பொருளாளராக திரு A.S. முருகேஷன் அவர்களும் புதிய நிர்வாகிகளாக அறிவிக்கப்பட்டனர். இளைஞர் பேரவையின் துணைத் தலைவர் திரு D. ரமணன் அவர்கள் கைபேசி மூலமாகவே நமது A.V.N. சங்க நகரத்தார் அனைவரின் முழு விபரமும் தெரிந்து கொள்ள முடியுமான புதிய செயலியை அறிமுகப்படுத்தி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றார்.

பொதுக்குழுக் கூட்டம் முடிந்த பின்னர் குழந்தைகளின் ஓவியப் போட்டி, மாறுவேடப் போட்டி, தனித்திறமை, நாட்டியம் என அரங்கமே அதிரும்படி நிகழ்ச்சிகள் நடந்தது நமது நகரத்தார்கட்கு மகிழ்ச்சியளித்தது.

விழாவின் சிறப்பாக நமது நகரத்தார் தந்தை எனப் போற்றப்படும் திரு நல்லசுப்பையா நினைவுப் பரிசாக கேடயமும், பண முடிப்பு, நால்வருக்கும் பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்கள் வழங்கும்படி தலைவர் ஏற்பாடு செய்தார்கள்.

1. சி. சூரியா (முதல் முறையிலேயே C.A. தேர்வில் தேர்ச்சி பெற்றவர்.
2. R. புவனேஸ்வரி (பரத நாட்டிய கின்னஸ் சாதனையாளர்)
3. AC. கார்த்திகா (சாரணர் படை, மாநில அளவில் ஆளுநரிடம் விருது வாங்கியவர்)
4. M. ஆதித்யா (கராத்தே – மாநில அளவில்)

ஆகிய நமது நகரத்தார் குழந்தைகளின் சாதனை சென்னை அ.வ.ந. சங்க விழாவால் பாராட்டப்பட்டது.

ஆண்களுக்கான இசைப் பந்து போட்டியுடன் விழா சிறப்பாக நிறைவேறியது. உடனே பரிசளிப்பு நடைபெற்றது.

போட்டியில் வெற்றி பெற்றவர்கள், கலந்து கொண்டவர்கள் என எல்லோருக்கும் பரிசு வழங்கப்பட்டதுடன் புத்தாண்டு (2022) காலண்டரும் வழங்கப்பட்டது.

ஆக, இந்த 32-ம் ஆண்டு குடும்பவிழா நகரத்தார் தந்தை திரு நல்லசுப்பையா நினைவு பரிசு வழங்கும் விழா, கொரோனா உதவித்தொகை வழங்க நன்கொடை அளித்த நகரத்தார்களுக்கு பாராட்டு விழா, கைபேசி புதிய செயலி அறிமுக விழா, புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கும் விழா என ஐம்பெரும் விழாவாக சிறப்பாக நிறைவேறியது. பொருளாளர் திரு V. சாமிநாதன் அவர்களால் சிறப்பான முறையில் இரத்தப் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. காலை முதல் துணைச் செயலாளர் திரு AS. முருகேசன், R. பிரபாகரன் அவர்களும் சந்தா மற்றும் நன்கொடை வசூல் செய்து தந்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

**தகவல் : T. துரைராஜ், சென்னை**



# நடராஜர் தன்னுடைய நடனத்தால் சிறப்பித்த ஐந்து திருத்தலங்கள்



நடராஜர் தன்னுடைய நடனத்தால் சிறப்பித்த ஐந்து திருத்தலங்கள் பஞ்ச சபைகள் என்றும் ஐம்பெரும் சபைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

1. சிதம்பரம்
2. மதுரை
3. திருவாலங்காடு
4. திருநெல்வேலி
5. குற்றாலம்

ஆகிய இந்த ஐந்து திருத்தலங்களும் முறையே பொற்சபை, வெள்ளிசபை, ரத்தின சபை, தாமிர சபை, சித்திர சபை என்று வரிசைப்படுத்தப்படுள்ளன. மேற்கண்ட ஐந்து சபைகள் உள்ள திருத்தலங்களைப் பற்றிய சிறிய குறிப்பு.

## வெள்ளி சபை:

சிவபெருமானின் திருவிளையாடல்கள் பெரும்பாலும் நடைபெற்ற இடமாக மதுரை திருத்தலம் திகழ்கிறது. மீனாட்சி அம்மனின் அரசாட்சியும், அருளாட்சியும் நிறைந்திருக்கும் மதுரையில்தான் மதுரை மீனாட்சி – சுந்தரேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த ஆலயம்தான் நடராஜரின் திருநடனம் கண்ட **வெள்ளி சபையாக** திகழ்கிறது. இதனை வெள்ளியம்பலம், வெள்ளி மன்றம் என்றும் அழைப்பார்கள். இந்த ஆலயத்தில் அருள்பாலிக்கும் நடராஜப் பெருமான், தன் பக்தனான பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நடனம் புரியும் நிலையில் காட்சி தருகிறார்.

இங்கு இறைவனின் நடனம் **சந்தியா தாண்டவம்** என்று அழைக்கப்படுகிறது. பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர்களுக்கு தில்லையில் காட்டியது போலவே இங்கும் இறைவன் தனது திருநடனத்தை காட்டி அருள் செய்தார்.

## சித்திர சபை:

தென்காசி மாவட்டம் திருக்குற்றாலத்தில் அமைந்திருக்கிறது, குற்றலாநாதர் திருக்கோவில், இது அகத்திய முனிவர் வழிபாடு செய்த திருத்தலம் ஆகும். இங்கு சிவபெருமான் நடனம் புரிந்த இடம் **சித்திர சபை** என்று வணங்கப்படுகிறது. இங்கு எமனை காலால் எட்டி உதைத்த ஈசன் தன் மனைவி பார்வதியுடன், மார்கண்டேயருக்கு அருளியபடி சித்திர வடிவில் காட்சியளிக்கிறார். இங்கு இறைவன் ஆடிய நடனத்திற்குப் பெயர் **திரிபுர தாண்டவம்** என்பதாகும். இந்தத் தாண்டவத்தைக் கண்டுகளித்த பிரம்மதேவன், தானே இறைவனின் திருநடனத்தை ஓவிய வடிவில் வடித்ததாகவும் அந்த இடமே சித்திர சபை, சித்திர அம்பலம், சித்திர மன்றம் என்றும் அழைப்பார்கள்.

## பொற்சபை :

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ளது திருமூலட்டநாதர் ஆலயம். இப்படிச் சொன்னால் பலருக்கும் தெரியாதுதான். சிதம்பரம் நடராஜர் கோவில் என்று சொன்னால்தான் பெரும்பாலானவர்களுக்குத் தெரியும். இங்கு அருள்பாலிக்கும் ஆடல் அரசனான நடராஜர் வீற்றிருக்கும் இடமே, **பொற்சபை** என்று அழைக்கப்படுகிறது. இதனை பொன்னம்பலம், கனகசபை, பொன்மன்றம் என்கிற பெயர்களாலும் அழைப்பார்கள். இறைவன் தனது திருநடனத்தை பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர்களுக்கு காட்டி அருளிய தலம் இதுவாகும். இந்தத் தலத்தில் நடராஜர் தனது இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கி நடனம் ஆடுகிறார். இத்தல இறைவன் ஆடும் நடனம் **ஆனந்தத் தாண்டவம்** ஆகும்.

## தாமிரசபை :

திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் முக்கியமான திருத்தலங்களில் ஒன்று, காந்திமதி உடனாய நெல்லையப்பர் திருக்கோயில். இங்கு நடராஜர் தனிச் சன்னிதியில் வீற்றிருக்கும் இடத்திற்கு **தாமிர சபை** என்று பெயர். இதற்கு தாமிர அம்பலம் தாமிர மன்றம் என்ற பெயர்களும் உண்டு. இந்தச் சபையில் திருநடனம் புரிகின்றார். இந்த நடனத்திற்கு **திருத்தாண்டவம்** என்று பெயர்.

## ரத்தின சபை:

திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காட்டில் உள்ளது. வடாரண்யேஸ்வரர் திருக்கோவில். இந்த ஆலயத்தில் காளியுடன் போட்டி நடனம் ஆடிய சிவபெருமான், முடிவில் தன்னுடைய ஒரு காலை தலைக்குமேல் தூக்கி ஆடி, காளிதேவியை வெற்றிகொண்டார் என்று தலபுராணம் சொல்கிறது. இந்த ஆலயத்தின் இறைவன்-வடாரண்யேஸ்வரர், இறைவி-வண்டார்குழலி அம்மை. இங்கு இறைவன் நடனம் ஆடிய இடம் **ரத்தின சபை** எனப்படுகிறது. ரத்தின அம்பலம் மணி மன்றம் என்ற பெயர்களும் இதற்கு உண்டு. இங்குள்ள இறைவன் எட்டு கரங்களுடன், வலது காலை தரையில் ஊன்றி இடது காலால் காதணியை மாட்டும் தோரணையில் காட்சியளிக்கின்றார். காரைக்கால் அம்மையார், தன் தலையால் நடந்து சென்று, இங்குள்ள நடராஜரின் திருவடியில் அமர்ந்து, அனுதினமும் அவரது திருநடனத்தைக் காணும் பேறு பெற்றார். இங்கு இறைவன் ஆடும் நடனம் **ஊர்த்துவ தாண்டவம்** என்று போற்றப்படுகிறது.

"கால்தூக்கி ஆடும் எம்பெருமானே! என்னை கை தூக்கிவிடு" என்று இறைவனை வணங்குவோம். நலம் பல பெறுவோம்.

ஓம் நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
திருச்சிற்றம்பலம்! தில்லையம்பலம்!!

**– ஆனந்த செல்வம், க/பெ சுப. செல்வம், சென்னை.**

## சிரிப்பு....



ஆசிரியர் : கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்துல கை வைக்க கூடாதுன்னு ஏன் சொல்றாங்க?

மாணவன் : கன்னத்துல கைவைச்சா நீச்சலடிக்க முடியாது என்பதால்.

ஒருவர் : ஏன் தலைவர் ஒரு அடி ஸ்கேலை (Scale) கையிலே வச்சுக்கிட்டு இப்பெல்லாம் பேசுறார்?

மற்றவர் : அவர் இப்பெல்லாம் அளந்துதான் பேசுவாராம்.

# 40-வது கல்விகாவலரின் தந்தை முன்னாள் பொதுநலச்சங்கத் தலைவர் திரு அ. சேதுராமன் செட்டியாரைப் பற்றிய செய்திகள்



தஞ்சாவூர் பாளையூர் அம்பலம் கொண்டார் திரு S. மாணிக்கம் செட்டியார் அவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையில் அவரின் தந்தையார் தெய்வத்திரு A. சேதுராமன் செட்டியார் அவர்களைப் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்படாமல் விடுபட்டு விட்டது என்பது வேதனையாக உள்ளது. அவர் ஒரு சிறந்த சமுதாய சேவையாளர்; சொல்வதை செய்து காட்டிய சாதனையாளர். கண்டிப்பும், நேர்மையும், பாரபட்சமற்ற நேர்மையுடன் கூடிய துணிவான செயலும் அவரின் சிறப்பான குணங்களாகும். எத்தனை சோதனைகள் வந்தாலும் தன்னுடைய கொள்கை களையும் செயல்பாடுகளையும் மாற்றிக் கொள்ளாத மனம் படைத்த இரும்பு மனிதர். அவர் வருவாய் குழு உறுப்பினர், வருவாய் குழுத் தலைவர், ஆலோசகர், பொருளாளர், தலைவர் என பொதுநலச் சங்க நிர்வாகத்தில் பல பொறுப்புகளை வகித்தவர். தான் ஏற்றுக்கொண்ட பதவிகளுக்கெல்லாம் தனது சீரிய செயலால் பெருமையைத் தேடித் தந்தவர். பதவிகளை அவர் ஒருபோதும் தேடிச் சென்றதில்லை. பதவிகள் தான் அவரைத் தேடி வந்தன என்பது நமது சமுதாய வரலாற்றில் நாம் கண்ட உண்மையாகும். அவர் மேற்கண்ட பொறுப்புகளில் பதவி வகித்த பொழுது ஆற்றிய சமுதாயப் பணிகள் பற்றிய விபரம்.

சிதறுண்டு கிடந்த இந்தியாவை ஒரு ஐக்கிய இந்தியாவாக உருவாக்கிய பெருமை இரும்பு மனிதர் என பாராட்டப்படும் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களைச் சாரும். அதே போன்று பல ஊர் நகரத்தார்கள் வசமிருந்த சொத்துக்களை எல்லாம் மீட்டு பொது நலச்சங்கத்தின் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வர மிகவும் உதவியாக இருந்தவர் என்கிற பெருமை இவருக்குண்டு. அவ்வாறு மீட்கப்பட்ட சொத்துக்களில் அடுக்கு

மாடி வீடுகள், வணிக வளாகம் கட்டியும், விவசாய நிலங்களில் புளியங்கன்றுகள், தென்னங்கன்றுகள் நட்டு வளர்த்தும் அதன் மூலம் வருவாய் பெருகி வரவும் சிறப்பாகப் பணியாற்றியவர். கல்மண்டபத்தை திருமண மண்டபமாக மாற்றியமைத்த மாபெரும் சாதனையாளர். அதேபோன்று சாத்தனூர் அச்சுக் கட்டு நிலத்தில் பாசன கிணறு வெட்டி பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ததன் மூலம் அப்பூமி பொன் விளையும் பூமியாக மாற்றியவர். அவர் இன்று நம்மிடம் இல்லை. உயர்ந்து நிற்கும் கட்டிடங்கள், வணிக வளாகங்கள் அவரால் நட்டு வளர்க்கப்பட்ட புளி மற்றும் தென்னங்கன்றுகள் வளர்ந்து தோப்பாகிப் பலன் தந்து கொண்டிருப்பதும் அவரின் தொலைநோக்கு பார்வைக்கும், சாதனைகளுக்கும், உழைப்பிற்கும் சான்றாகும். அவரின் வழியில் பயணித்து சமுதாய முன்னேற்றத்திற்கு உழைப்பதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான நன்றியாகும்.

**செ. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**



உ

ஸ்ரீ வயிரவ சுவாமி துணை

வாழ்த்துகளுடன்

கடை: 94432 06431
97867 46431

வீடு: 97874 81103


# சிவசக்தி ஸ்டோர்ஸ்



279, அண்ணாசாலை,
**பொன்னமராவதி.**

**மளிகை, ஆயில், ஸ்டேசனரி மற்றும் குளிர்பானங்கள் மொத்தம் & சில்லறை**

# அன்னம் டிரேடர்ஸ்



வடுகநாதன் ரோடு,
KVB பேங்க் அருகில்,
**பொன்னமராவதி.**



ஸ்டாக்கிஸ்ட்:
**நெஸ்டில், மைசூர் சோப்,**
**ராஜம் சுக்கு காபி,**
**பண்ணாரி மைதா.**

# ராநா கெஸ்ட் ஹவுஸ்

KVB பேங்க் அருகில், **பொன்னமராவதி.**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) ரூம்கள்,
சிறிய பெரிய அளவுகளில், நிறைந்த வசதிகளுடன்,
நிறைவான கட்டணத்தில்,
நகரின் மத்தியில் தரமான தங்கும் விடுதி.



# தாய் மொழியைப் போற்றுவோம்

ஓரறிவு தொடங்கி ஐந்து அறிவு வரைக்கும் வளர்ந்துவிட்ட உயிர்க் குலத்திற்கு அதற்கு மேலான மற்றொரு அறிவைப் பெறுவதற்கு மிகுந்த கவனமும் காலமும் தேவைப்பட்டது. ஆறாவது அறிவு பெறுகிற அந்த உயிரினம் உலகத்தையே உணர்ந்ததாக இருக்க வேண்டும். உலகத்தைத் தன்னுள் உணர்வதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய அறிவு பெறுவதற்குக் கூடுதலாக ஓர் புலனும் அதனை வெளிப்படுத்த ஓர் கருவியும் அவசியம் ஆயின. அவ்வாறு மனிதனுக்கு அமைந்த மூன்றாவது விழி அவனுடைய மொழி ஆகும். தான் கண்டதை, கற்றதை, பெற்றதை உள்ளுக்குள் வாங்கி, உணர்ந்துகொண்டு தன் மனத்தில் எழும் எண்ண அலைகளை மற்ற மனிதர்களுக்கும் புரிய வைக்கப் பயன்படுகிற அற்புதமான சாதனம் மொழியே ஆகும்.

மனிதர்களுக்கு தாயைப் போல, தந்தையைப் போல, தான் பிறந்த ஊரைப் போலப் பெருமை தருவது தாய்மொழியும் ஆகும். அவரவர் தாய்மொழி அவரவர்க்கு உயர்ந்த தன்மை உடையது என்றாலும் மனிதர்களுக்கு மட்டும் தாய் மொழி இல்லை. மொழிகளுக்கும் கூடத் தாய்மொழி உண்டு. இன்றைக்கு இருக்கக்கூடிய எல்லா மொழிகளுக்கும் தாய்மொழியாகவும், தந்தை மொழியாகவும் விளங்குவது தமிழே ஆகும். அதனால்தான் தமிழை

**ஓங்கலிடை வந்த உயர்ந்தோர் தொழ விளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்–ஆங்கவற்றுள்**
**மினேர் தனி ஆழி வெங்கதிர் ஒன்று ஏனையது**
**தன்னே ரிலாத தமிழ்**

என்று மலையில் தோன்றி, பெரியோர்கள் எல்லாம் போற்றிப் புகழுமாறு இந்த உலகத்தில் இருளை அகற்றி மின்னலைப் போன்ற ஒளியுடன் கடலில் இருந்து ஒளிரக் கூடியவை இரண்டு,

அவற்றுள் ஒன்று வெங்கதிரோன் எனப்படும் சூரியன். மற்றொன்று தனக்கு நிகர் இல்லாத பெருமை உடைய தமிழ்மொழி. சூரியன் மலை இடுக்குகளிலிருந்து முதலில் தோன்றுகிறான். தமிழில் பொதிகை மலை முகடுகளில் இருந்து தோன்றிய பெருமை உடையது. முன்னோர்கள் சூரியனை வழிபட்டவர்கள், அதைப்போலவே தமிழையும் வழிபட்டவர்கள். இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கும் கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் புற இருளைப் போக்குவது சூரியன் என்றால் அக இருளைப் போக்குவது தனக்கு நிகர் இல்லாத தமிழ் ஆகும் என்று தண்டியலங்காரம் என்னும் இலக்கணநூல் தமிழின் பெருமையைச் சிறப்பித்துக் கூறுகிறது.

**பொய் அகல, நாளும் புகழ் விளைத்தல் என வியப்பாம்?**
**வையகம் போர்த்த, வயங்கு ஒலி நீர்-கையகலக்**
**கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு**
**முன்தோன்றி மூத்த குடி**

என்று போற்றிப் பாடுகிறது புறப்பொருள் வெண்பா மாலை. “இனிமையும், நீர்மையும் தமிழ் எனல் ஆகும்” என்று தமிழின் இயல்பினை எடுத்துரைக்கிறது பிங்கள நிகண்டு. இவையெல்லாம் பழம்பெருமையாக இருக்கட்டும். மகாகவி பாரதியார் பல மொழிகளை அறிந்த வல்லவர். பல இலக்கியக் களங்களைக் கண்டவர். அவர் தமிழ் மொழியை, “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என்று போற்றி பாடுவதோடு, தமிழ் மொழியின் அழகினை வியந்து தென்றலுடன் பிறந்த பாஷை என்று உவமைப்படுத்துவது பொருத்தமாக அமைகிறது.

பாவேந்தர் பாரதிதாசனோ “திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்” என்று போற்றிப் பாடுகிறார்.

உலகமெல்லாம் தமிழை உச்சி மீது வைத்துக் கொண்டாடுகிறது. உலக நாடுகளில் எல்லாம் தமிழுக்கு

சிறப்பான இடம் இருக்கிறது. தான் பிறந்த தமிழகத்தில் மட்டும் தமிழுக்கு இடம் இல்லையோ? தன் பிள்ளைகளாகிய தமிழர்களின் நாவில்மட்டும் தமிழுக்கு இடம் இல்லையோ? என்னும் ஐயவினா இப்போது எழுகிறது. "வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ வீட்டுப்பாஷை கற்கிலாய் நீ போ போ போ" என்று பாரதியார் சினந்து அங்கே விரட்டியிருக்கிறார். "தமிழ் இனி மெல்லச் சாகும்" என்ற எச்சரிக்கையையும் நமக்கு முன்பே காட்டியிருக்கிறார். உலகமெல்லாம் போற்றும் தமிழை நாம் காப்பாற்றிக் கொள்வதற்கு சரியான தருணம் இது. எல்லா மொழியும் நல்ல மொழிதான். ஆனால் ஒருவருக்குத் தாய்மொழிதான் உயர்ந்த மொழியாக இருக்க வேண்டும். தமிழ் மொழி எல்லா மொழிகளுக்கும் தாய்மொழி என்பதை நாம் உணர வேண்டும். தாய் மொழியைப் போற்றுவோம்.

**– புலவர் தி. உஷா எம்.ஏ. அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.**

வாழ்க வையகம்! உ வாழ்க வளமுடன்!!

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

மக்கள் நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வந்தால் விரைவாக குணம் பெற்று நலமுடன் வாழவும் வாழ்த்துகிறோம்.

## ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்

பஸ் ஸ்டாண்டு முன்புறம், பொன்னமராவதி - 622 407.

**லயன் மு. வையாபுரி ராஜ்குமார். செல் : 98426 50806**

## ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்

127, முருகன் காம்ப்ளக்ஸ், கோவைபுதூர், கோவை - 641 042.

**மு. கார்த்திக் D.Pharm., செல் : 98426 50506**

## நியூ ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்

அம்பேத்கார் சதுக்கம், அறிவொளி நகர், கோவை - 641 042.

அரசு ராமனாதன் MCA., செல் : 98422 44497

உ

ESTD : 1991

ஸ்ரீ மங்கைநாயகர் தேனம்மை சுவாமிகள் துணை

நம் நகர பெருமக்களுக்கு நல்வாழ்த்துக்கள்

Off : 0461 - 2328501
Res : 0461 - 2328502
91711 70000

SARC

# ஸ்ரீ அலங்கார் ரெக்சின் சென்டர்

**Dealers in :**

**Rexine, Furniture and Furnishing Materials**

**ஒரு வருட உத்திரவாதத்துடன் தேக்கு மரக்கட்டில் - டபுள் மற்றும் மெத்தை ரூ. 15,100/- மட்டும்.**
**(தமிழகம் முழுவதும் டெலிவரி செய்யப்படும்).**

247-C/4, Palayamkottai Road, Near Old Bus-Stand, Tuticorin-628 002.
E-mail : alankarexine@gmail.com www.tuticorinalankarrexine.com

AB

# ஸ்ரீ அலங்கார் பில்டர்ஸ்

Structural Engineer ❖ Licensed Surveyor in Tuticorin City Municipal Corporation
❖ Panel Valuer in Tuticorin District Central Co.op. Bank Ltd.,

**கட்டிட வரைபடம், வடிவமைப்பு, முகப்புதோற்றம்,**
**கட்டிட மதிப்பீடு, வரைபட அனுமதி சான்று, வாஸ்து முறைப்படி கட்டிடங்கள்**
**சிறந்த முறையில் செய்து தரப்படும்.**

71-5, Balavinayagar Kovil Street, Upstairs Sri Alankar Rexine Centre,
Tuticorin- 628 002.
Email : tutyalankarbuilders@gmail.com www.tuticorinalankarrexine.com

நம் சமூக பணியில்....

**அரு. சோம சண்முகநாதன்**

**S. சிவகாமி**

**S. சசிகுமார் B.A.,DECM.,**

**Er. S. பிரஹலாதன் M.E.,**

**பூதமங்கலமூருடையார், உலகம்பட்டி.**

# 2021-22 வழங்கப்பட்ட உதவித் தொகை விபரம்

நடைபெறும் 2021-22 கல்வி ஆண்டில் நமது மாணவ மாணவியர்களுக்கு கல்வி வளர்ச்சிக் கழகம் உதவித் தொகை வழங்கிய விபரங்கள்.

| வ. எண் | வகுப்பு | | தொகை வீதம் | மாணவர் எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | 6,7,8 வகுப்பு மாணவர் | | 500 | 16 | 8,000 |
| 2. | 9-ஆம் வகுப்பு | „ | 1,000 | 17 | 17,000 |
| 3. | 10-ஆம் வகுப்பு | „ | 1,000 | 21 | 21,000 |
| 4. | 11-ஆம் வகுப்பு | „ | 1,000 | 17 | 17,000 |
| 5. | 12-ஆம் வகுப்பு | „ | 1,000 | 23 | 23,000 |
| 6. | பட்டப்படிப்பு | „ | 5,000 | 59 | 2,95,000 |
| 7. | B.E./M.B.B.S./C.A. | „ | 6,000 | 15 | 90,000 |
| 8. | கல்விக் கடன் | „ | 10,000 | 4 | 40,000 |
| | ஆக மொத்தம் | | | 172 | 5,11,000 |

இந்தக் கல்வி ஆண்டில் மொத்தம் 172 மாணவர் களுக்கு ரூ. 5,11,000 கல்விக் கடன் மற்றும் இலவச உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளன.

**– செ. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

## குரல் புத்தகம் கிடைக்கவில்லையா?

சந்தாதாரர்களுக்கு குரல் புத்தகம் இரு மாதத்திற்கு ஒரு முறை அதாவது ஜனவரி, மார்ச், மே, ஜூலை, செப்டம்பர், நவம்பர் ஆகிய மாதங்களில் அந்தந்த மாதம் 5ஆம் தேதிக்கு பிறகு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. 10ஆம் தேதிக்குள் தங்களுக்குக் கிடைத்துவிடும். இருப்பினும் 20ஆம் தேதிவரை காத்திருந்து குரல் கிடைக்காதவர்கள் அலுவலக எண்ணுக்கு (8778355837) குறுஞ்செய்தி மூலமாகவோ, கைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் உடனே அனுப்பி வைக்கப்படும். **– தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

## காப்புகட்டு விழா (பெயர் சூட்டுதல்)



பூர்வீகம் உலகம்பட்டி கோயம்புத்தூர் திரு ச. சதாசிவம் செட்டியார் – ஜெயமணி ஆச்சி தம்பதியரின் மகன் வழிப் பேரனும், தஞ்சாவூர் திரு ராமசாமி செட்டியார் – செல்வமணி ஆச்சி தம்பதியரின் மகள் வழிப் பேரனுமாகிய, திரு வைரவ பாண்டியன் – சத்யா தம்பதியரின் ஆண் குழந்தைக்கு 20.01.2022 அன்று தஞ்சாவூரில் காப்பு கட்டி, **அருண் சிவா** என்று பெயர் சூட்டப்பட்டு, விழாவானது உற்றார் உறவினர்களும், நண்பர்களும் வாழ்த்த சிறப்பாக நடைபெற்றது.

**– தகவல் : A.V. சிவபிரகாசம், செய்தி தொடர்பாளர், கும்பகோணம்.**


உ
சிவமயம்

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

**உஷா ஜுவல்லர்ஸ் பைனான்ஸ் டெக்ஸ்**

**77-78, மீனாட்சி டவர்ஸ், P.T.ராஜன் ரோடு,**
**பீபீ குளம், மதுரை-2.**

**: 7373073738**

# கொடுங்கள்.....
# அதைவிட பன்மடங்கு பெறுவீர்கள்....

பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவன் கொண்டு வந்திருந்த தண்ணீர் தீர்ந்துவிட்டது. அவன் போக வேண்டிய தூரமோ அதிகம். குடிக்கத் தண்ணீர் இல்லாமல் அவன் மயங்கி விழும் நிலைக்கு வந்து விட்டான். இந்தப் பாலைவனத்திலேயே தாகத்தால் உயிரை விட்டுவிடுவோமா என்று நினைத்துக் கொண்டு இருந்தபோது தூரத்தில் ஒரு குடிசை போல் ஏதோ ஒன்று தெரிந்தது. கால்களை நகர்த்தவே மிகவும் கஷ்டமாக இருந்தாலும் எப்படியோ கஷ்டப்பட்டு அவன் அந்த இடத்திற்குச் சென்று விட்டான். அங்கே ஆட்கள் யாரும் இல்லை. ஒரு அட்டையில் யாரோ எழுதி வைத்திருந்தார்கள். "ஜக்கில் உள்ள தண்ணீரை அந்த பம்ப் செட்டில் ஊற்றி அடித்தால் தண்ணீர் வரும். குடித்துவிட்டு மறுபடியும் ஜக்கில் தண்ணீரை நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்" என்று.

அந்தப் பம்ப் செட்டோ மிகவும் பழையதாக இருந்தது. அந்த தண்ணீரை ஊற்றினால் அது இயங்குமா? தண்ணீர் வருமா? என்பது அவனுக்கு சந்தேகமாக இருந்தது. அது இயங்காவிட்டால் அந்தத் தண்ணீர் வீணாகி விடும். அதற்குப் பதிலாக அந்தத் தண்ணீரைக் குடித்துவிட்டால் தாகமும் தணியும், உயிர் பிழைப்பதற்கு உத்திரவாதமும் உள்ளது.

அந்தப் பயணி யோசித்தான். தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று அறிவு கூறியது. ஒருவேளை அதில் எழுதி வைத்திருப்பது போல் அந்த பம்ப் இயங்குவதாக இருந்து, அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், அது மகாபாதகம் என்று மனது சொன்னது. இனி தன்னைப் போல தாகத்தோடு வருபவர்களுக்கு அது பயன்படாமல் போகத் தானே காரணமாகி விடுவோம் என்று மனசாட்சி எச்சரித்தது. அவன் அதற்கு மேல் யோசிக்கவில்லை. ஆனது ஆகட்டும் என்று அந்தப் பம்பில் அந்தத் தண்ணீரை ஊற்றிவிட்டு அதை அடித்து இயக்க

ஆரம்பித்தான். தண்ணீர் வர ஆரம்பித்தது. தாகம் தீர வேண்டிய அளவு தண்ணீர் குடித்து விட்டு அந்த ஜக்கில் நீரை நிரப்பி விட்டுச் செல்கையில் அவன் மனம் நிறைந்திருந்தது.

இந்த நிகழ்ச்சியில் இரண்டு படிப்பினைகள் உள்ளன. ஒன்று நாம் அவசியமான காலத்தில் அனுபவிப்பதை அடுத்தவருக்கும் அதேபோல பயன்படும்படி விட்டுப்போக வேண்டும். இரண்டாவது எந்த நன்மையும் நம்முடன் நின்று விடலாகாது.

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான மனிதர்களிடம் அந்த நல்லெண்ணம் இருப்பதில்லை. **“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”** என்ற மனநிலையில் ஒவ்வொருவரும் இருந்தால் இந்த உலகம் இன்பமயமாகி விடுமல்லவா?

அடுத்த படிப்பினை நாம் நம் வாழ்க்கையிலும், கொடுத்தால்தான் பெற முடியும். இது பிரபஞ்ச விதி. இன்னும் சொல்லப்போனால் கொடுத்ததை மட்டுமே பெறமுடியும். ஆனால் கொடுத்த அளவினைக் காட்டிலும் பன்மடங்காகப் பெறுகிறோம். பிரபஞ்சம் நமக்குக் கட்டாயம் திருப்பித் தரும்.

மேலே சொன்ன பயணி ஊற்றிய தண்ணீரை விடப் பன்மடங்கு தண்ணீரைப் பெற்று அனுபவித்து, முதலில் இருந்த அளவு நீரை எடுத்தும் வைக்கிறான். அவனைப் போல் நமக்கும் கொடுத்துவிட்டால் இருந்ததையும் இழந்து விடுவோமோ என்று சந்தேகம் தோன்றலாம். ஆனால் அந்த சந்தேகம் உண்மையை அடிப்படையாகக் கொண்டதல்ல. அந்த சந்தேகத்தோடு தர மறுக்கையில் நமக்கு வருவதையும் தடுத்து வைக்கிறோம்.

எனவே எது உங்களுக்கு அதிகம் வேண்டுமோ, அதை நீங்கள் முதலில் தேவைப்படும் மற்றவர்களுக்குக் கொடுத்துப் பாருங்கள். செல்வத்தை மட்டுமல்ல, அன்பையும் மகிழ்ச்சியையும் கூட அடுத்தவர்களுக்கு கொடுங்கள். கண்டிப்பாக அது பலமடங்கு பெருகி திரும்பவும் உங்களை வந்து சேரக் காண்பீர்கள்.

**- S. அமுதா, மடிப்பாக்கம், சென்னை.**



# தமிழ்த் துறையில் நம்மவரில் முதல் பெண் தமிழ் முனைவர்

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் 2011-ம் கல்வியாண்டிலேயே திருமதி வனிதா வையாபுரி M.A., Ph.D. அவர்கள் **"திருமந்திரத்தில் தத்துவங்கள்"** என்ற பிரிவில் ஆய்வுகள் மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

இவர் பொன்னமராவதி மூங்கில்குத்து திரு ந. ராமமூர்த்தி செட்டியார் - இரா. மங்கையர்கரசி ஆச்சி இவர்களின் மகளும், செம்பூதி திரு தே. சுப்பையா செட்டியார் - சு. விஜயகுமாரி ஆச்சி இவர்களின் மருமகளும். கோவை திரு சு. வையாபுரி M.A. M.Phil. அவர்களின் மனைவியுமாவார்.

இவர் மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்ப் பிரிவில் முழுநேர (Regular, Full Time Research) முனைவர் பட்ட ஆய்வினை நிறைவு செய்ததோடு தாம் பயின்ற கல்லூரியில் முதன் முதலில் முனைவர் பட்டம் பெற்றவர் என்பதும், நம்மவரில் தமிழ்த்துறையில் இப்பட்டத்தினைப் பெற்ற முதல் பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவர் ஆய்வினை மேற்கொண்ட காலத்திலேயே பாராதிதாசன் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கியப் பயிற்சியையும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த பயிற்சியையும், திருவாசக முற்றோதல் பயிற்சியையும் நிறைவு செய்ததோடு திருவாவடுதுறை ஆதீனத்தில் "சைவ சித்தாந்த ரத்தினம்" என்ற சிறப்புப் பட்டத்தையும், சேக்கிழார் சிவநெறிக் கழகத்தின் மூலமாக "திருமந்திரச் செல்வி" என்ற பெருமைமிகு பட்டத்தையும் பெற்றுள்ளார்.

பல தேசியக் கருத்தரங்கங்களிலும், பன்னாட்டுக் கருத்தரங்கங்களிலும் பங்கேற்றதோடு இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாலும்,

மலேசியா பல்கலைக்கழகத்தாலும் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தாலும் வெளியிடப்பட்டுள்ளன.

முனைவர் பட்டம் பெற்ற பின்னர் தாம் பயின்ற கணேசர் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியராகவும், ஈச்சனாரி கற்பகம் பல்கலைக்கழகத்தில் புத்தக எழுத்தாளராகவும் பணியாற்றியவர். இவருக்கு முனைவர் பட்டம் பெற்ற அந்த கல்வியாண்டிலேயே கல்வி வளர்ச்சிக் கழகத்தாலும், பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்க அன்றைய நிர்வாகிகள் மூலமாகவும், சேக்கிழார் சிவநெறிக் கழகத்தின் வாயிலாகவும், அறமனச் செம்மல் திரு அரு.வே. மாணிக்கவேலு-சரஸ்வதி அவர்களின் மூலமாகவும் பாராட்டும், வாழ்த்தும், கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

**தகவல் : திரு S. வையாபுரி, கோவை**

கடந்த ஜனவரி 2022 குரலில் நம்மவரில் முதல் பெண் முனைவர் என திருமதி சூர்யகலா குமார் அவர்களை குறிப்பிட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு முன்பே 2011-ம் ஆண்டு கோவை திருமதி வனிதா வையாபுரி அவர்கள் தமிழ்த் துறையில் ஆராய்ச்சி செய்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இவர் மேலும் பல முனைவர் பட்டம் பெற வாழ்த்துகிறேன். **– தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்**



## சித்தர்கள் பௌர்ணமி பூஜை

ஆலவயல் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தாரால் தொடர்ந்து நடத்தப்பெறும் 120-வது சித்தர்கள் பௌர்ணமி பூஜை 17-01-2022 அன்றும் 121-வது பூஜை 16-02-2022 அன்றும் அரசின் வழிகாட்டுதல்களின்படி சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து சிறப்பாக நடந்தேறியது. கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் பார்சலாக வழங்கப்பட்டன.

**தகவல் : திரு பழ. சொக்கலிங்கன், ஆலவயல்.**

# கல்விக் காவலர்கள்

1. **மே 2004 : முதல் கல்விக் காவலர், ஆமலூருடையார், தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி அவர்கள், அம்மன் குறிச்சி, சென்னை.**
2. ஜூலை 2004 : மேலூருடையார், **திரு. தே.மா. பழனிச்சாமி செட்டியார் – திருமதி. சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
3. செப்டம்பர் 2006 : கழனிவாசலூருடையார் **திரு.நா. சுப்பிரமணியன்** BSc., CAIIB **திருமதி. தமிழ்ச்செல்வி** B.Lit., அவர்கள், கல்லம்பட்டி, சென்னை.
4. **மார்ச் 2007 : நாவலூருடையார், திரு. ச. கனகசபை B.E., மனோரஞ்சிதம்** அவர்கள், உலகம்பட்டி, திருச்சி.
5. ஜூலை 2007 : கழூகக்கூருடையார், **தெய்வத்திரு. இராம. வேலாயுதம் செட்டியார் – பார்வதி ஆச்சி** அவர்கள், படமிஞ்சி, சென்னை.
6. நவம்பர் 2007 : கழனிவாசலூருடையார், **தெய்வத்திரு. மு.சி.கி. நாராயணன் செட்டியார் – இராஜமாணிக்கம் ஆச்சி** அவர்கள்,கல்லம்பட்டி.
7. மே 2010 : சிக்கலூருடையார், **தெய்வத்திரு. நல்லாசிரியர் மெ. இளங்கோ – சாவித்திரி** அவர்கள். வா.புதூர்.
8. ஜூலை 2011 : அரும்பாக்கிளையார். திரு. **M.M. தியாகராஜன் B.Sc., தெய்வத் திருமதி. ஜோதிமணி** அவர்கள் புழுதிப்பட்டி. மதுரை.
9. ஜனவரி 2012 : பொன்னமராவதி பூண்டிலூருடையார். தெய்வத்திரு. மா. தங்கராஜன் – அழகுமீனாள் அவர்கள், புழுதிபட்டி பெங்களூரு.
10. மார்ச் 2012 : கழூகக்கூருடையார். **தெய்வத்திரு. மு.ஆ. இராமசாமி செட்டியார். தெய்வத்திருமதி. இராஜாமணி ஆச்சி,** சொக்கம்பட்டி.
11. மே 2012 : நாவலூருடையார், **திரு. ச. சொக்கலிங்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. தனபாக்கியம் ஆச்சி** அவர்கள் உலகம்பட்டி.
12. **ஜூலை 2012 : கழனிவாசலூருடையார். திரு. P.L. இராமஜெயம், பத்மாவதி அவர்கள், பொன்னமராவதி.**
13. செப்படம்பர் 2012 : கழூகக்கூருடையார். **தெய்வத்திரு.** M.S.M. **மாணிக்கம் செட்டியார் – சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
14. **நவம்பர் 2012 : பணப்பாக்குழூருடையார். தெய்வத்திரு. கு. சொக்கலிங்கம் செட்டியார் - சொ. தேனம்மாள் ஆச்சி, செம்பூதி.**
15. மார்ச் 2013 - அரும்பாக்கிளையார், **தெய்வத்திரு. இராம. கதிரேசன் செட்டியார். திருமதி.முத்துலெட்சுமி ஆச்சி,** புழுதிப்பட்டி.
16. **மே 2013 : மேலூருடையார். தெய்வத்திரு. தே.மா. நாராயணன் செட்டியார் – சண்முகவள்ளி ஆச்சி,** பொன்னமராவதி.
17. ஜூலை 2013 : பூதமங்கலமூருடையார். **திரு. ச. இராமலிங்கம் – இராஜமாணிக்கம்,** அயனாவரம். சென்னை.
18. நவம்பர் 2013 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. துரைராசு செட்டியார் – மீனாட்சி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை

19. ஜனவரி 2014 : நாவலூருடையார். **தெய்வத்திரு. அரு. வேலாயுதம் செட்டியார் – சம்பூர்ணம் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

**20. மார்ச் 2014 : பூதமங்கலமுருடையார். திரு. R. பரமசிவம் B.E., தெய்வத்திருமதி. சிவகாம சுந்தரி, பொன்னமராவதி, சென்னை.**

**21. ஜனவரி 2015 : பூதமங்கலமுருடையார். திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் – ஜெயபாரதி ஆச்சி, அம்மன்குறிச்சி, திருச்சி.**

**22. மார்ச் 2015 : அரும்பாக்கிளையார். திரு. A.P. ஜெயபால் – புவனேஸ்வரி, பொன்னமராவதி, ஈராடு.**

23. ஏப்ரல் 2015 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. ம.வெ. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி** உலகம்பட்டி.

24. ஏப்ரல் 2015 : நாவலூருடையார். **திரு. சித. நடராஜன் செட்டியார், தெய்வத்திருமதி. இராஜம்மாள் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

25. மே 2015 : நாவலூருடையார். **திரு. அரு.வே. மாணிக்கவேலு – சரஸ்வதி,** பொன்னமராவதி.

**26. ஜுலை 2015 : ஆமலூருடையார். திரு. வெ.இராம.சுப. செல்வம்** B.Sc., ACA., **– ஆனந்தம் ஆச்சி, அம்மன்குறிச்சி, சென்னை.**

27. ஜனவரி 2016 : அரும்பாக்கிளையார், தெய்வத்திரு. **மங்கைபாகன் செட்டியார் – சிகப்பி ஆச்சி,** புழுதிப்பட்டி.

28. மே 2016 : கழுகக்கூருடையார், **திரு. சி.சொ.மு. இராமையா செட்டியார் – தெய்வத்திருமதி. ஜெகநாதம் ஆச்சி,** கொன்னைப்பட்டி, தேனி.

29. செப்டம்பர் 2017 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. நேசமணி செட்டியார் – அருள்நிதி புவனேஸ்வரி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை.

30. ஜனவரி 2018 : பணப்பாக்கூருடையார் **தெய்வத்திரு. சுப. மணிவாசகம் செட்டியார் – தேன்மொழி ஆச்சி,** காரைக்குடி.

31. செப்டம்பர் 2018 : கழுகக்கூருடையார் **திரு. சோம. கதிரேசன் செட்டியார் – தவமணி ஆச்சி,** பொன்னமராவதி, தொட்டாம்பாளையம்.

32. ஜுலை 2019 : அரும்பாக்கிளையார் **திரு. பொன். சிவஞானம் செட்டியார் – ராஜகுமாரி ஆச்சி,** சிறுகுடி.

**33. ஆகஸ்ட் 2019 : நாவலூருடையார் தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி, பொய்யாமணிப்பட்டி.**

**34. ஆகஸ்ட் 2019 : வரதலூருடையார் ந. செல்வம் செட்டியார் – சிவயோகம் ஆச்சி, புழுதிபட்டி / கோவை.**

**35. ஜனவரி 2020 : பழனி ஆதிசைவ அன்னதான மடம் – அருள்மிகு பழனி ஆண்டவர் அறக்கட்டளை, பழனி.**

36. மார்ச் 2020 : மேலுருடையார் **தெய்வத்திரு. செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் – திருமதி. செம்பாயி ஆச்சி,** சிறுகுடி.

**37. அக்டோபர் 2020 :** பொன்னமராவதி **பூண்டிலூருடையார்**
திரு. சி. வெள்ளைனச்சாமி செட்டியார் - திருமதி. சாந்தி ஆச்சி, சிறுகுடி / கோவை.

**38. டிசம்பர் 2020 :** கழனிவாசலூருடையார் கிருங்காக்கோட்டை
திரு. V. லட்சுமணன் செட்டியார் - பாக்கியலட்சுமி ஆச்சி தம்பதியர்

**39. மே 2021 :** மேலூருடையார் **செம்பூதி/பொன்னமராவதி** தெய்வத்திருவாளர்கள்
**தே.மா. சுப்பையா செட்டியார்- சுப. பூங்கோதை ஆச்சி**

40. **டிசம்பர் 2021 : பாளையூர் அம்பலம்கொண்டார் ஒடுவன்பட்டி/ தஞ்சை திரு மாணிக்கம் செட்டியார் – திருமதி சுசீலா ஆச்சி**

41. **பிப்ரவரி 2022 : கழுகக்கூருடையார் கிருங்காக்கோட்டை/ கோவை தெய்வத்திருவாளர்கள் தேனப்பன் செட்டியார் – சந்திரா ஆச்சி**

---

# வாசகர் குரல்



**வாசகர் குரல் : 157-1**

1. குரல் 2021 ஜூலை இதழ் பக்கம் 4-ல் நம்மவர்களின் குடும்பப் பிரச்சனைகளை அனுபவமிக்க பெரியவர்களைக் கொண்டு சிறிய சிறிய பிரச்சனைகளைத் தீர்க்கலாம். சமரச தீர்வு மையம் எனவும் தொண்டு சேவையாக அமைத்தால் சமுதாயத்திற்கு செய்யும் பெரும் தொண்டு எனவும் இதை பொதுநலச் சங்க நிர்வாகிகள் கவனம் எடுத்து நடத்தினால் நல்லது எனவும்,

2. குரல் 2021 நவம்பர் இதழ் பக்கம் 2-ல் நம்மவர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்களும், வேலை கிடைக்காமல் சிரமப்படுபவர்களும் உள்ளார்கள். பொது நிறுவனம் அமைத்து சிறிது மூலதனமாகப் போட்டு நம்மவர்கள் குலத் தொழிலான முறுக்கு, சீடை, வடகம், பாய் முடைதல் போன்ற தொழில் ஏற்படுத்தி வருமானம் பெற வழி கொடுக்கலாம். யாவரும் வேலைவாய்ப்புகள் பெற தொழில் நிறுவனம் தொடங்கப்பட வேண்டும். இதைப் பொதுநலச் சங்க நிர்வாகிகள் சமுதாய நலன் கருதி தொழில் நிர்வாகிகள் குழு, தொழில் வளர்ச்சிக் கழகம் அமைப்பு ஏற்படுத்தி வழிவகுத்து உதவிட வேண்டுகிறேன் எனவும் சிந்தனை செய்தி எழுதி உள்ளார்கள். அவர்கள் எழுதிய சிந்தனை செய்திக்கு பொதுநலச் சங்க நிர்வாகிகள் முன்வர வேண்டும் என நானும் வேண்டி கேட்டுக் கொள்வதோடு, உரத்த சிந்தனை எழுதிய தலைவர் அவர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

3. குரல் 2022 ஜனவரி இதழ் பக்கம் 5-ல் படித்து பட்டம் பெற்றவரும், படிக்கும் மாணவ மாணவியர்களும் மற்றவர்களும் எழுத்துத் திறன், படிக்கும் திறன் மேம்பட வாசகர் குரலில் எழுதுங்கள்; கவிதை, கட்டுரை, படித்தது, அறிந்தது இவை போன்றவற்றை எழுதும் இளம் எழுத்தாளர்களுக்கும் மாணவ மாணவியர்க்கும்





உற்சாகப்படுத்தும் வகையில் ஊக்குவிக்கும் பரிசாக பரிசு உண்டு எனவும் எழுதி உள்ளார்கள். அறிவுத் திறனை ஊக்குவித்து இளம் எழுத்தாளர்கள் மற்றவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டால் அவர்களின் அறிவும், திறனும் மென்மேலும் வளரும். அறிவுத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு எழுதிய தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!!

**– பி.எல்.ஆர். கோவை.**

**வாசகர் குரல் : 157-2**

நமது குரல் ஜனவரி 2022 புத்தகம் புகழஞ்சலி திருவுருவப் படத்துடன் வந்தது கண்ணீரைக் கசியவிட்டது. வரும் முன் காப்போம் என்பது போல நவம்பர் 2021 குரல் பக்கம் 47-ல் வாழ்நாள் முழுவதற்கும் வாழ்க்கை துணை யார்? என சிந்தனை கட்டுரை எழுதி, ஆன்மாவிற்கு நல்ல எண்ணமும், சுயநலமற்ற நற்செயல்கள் தான் உலகிற்கு ஊருக்கு உழைத்திடல் நல்ல யோகம் எனவும் ஆன்மாதான் வாழும் காலம்வரை விலாசம் எனவும், தனது ஆயுள் முடியப்போகிறது என முன்னமே அறிந்துதான் மற்றவர்களும் இப்படி வாழ்ந்தால் தான் நல்லது என கடைசி கட்டுரையாக எழுதியிருப்பாரோ? அவரின் கட்டுரை யாவருக்கும் பொருந்தும். எல்லோரும் நலமாக வாழனும் என கடைசி ஆசையாக கட்டுரை எழுதி வெளியிட்ட நமது ஆசிரியர் செயலாளர் போற்றத்தக்கவர். திரு சுப. செல்வம் அவர்கள் ஆன்மா சாந்தி அடையவும் அவரின் சேவை, விலாசம், புகழ் என்றும் நிலைத்திடவும் இறைவனை நினைத்து வேண்டுகிறேன். அவர்களது குடும்பத்தார்களுக்கும் ஆறுதல் கூறுகிறேன். **– பி.எல்.ஆர். கோவை**

## சதாபிஷேக விழா

**(80ஆம் ஆண்டு நிறைவு விழா)**

திண்டுக்கல் உயர்திரு. **தே. பரமானந்தம் செட்டியார்** - **ப. மீனாட்சி ஆச்சி** (பூர்வீகம் செம்பூதி) இவர்களின் 80ஆம் ஆண்டு நிறைவு சதாபிஷேக விழா வைரவன்பட்டியில் 6.03.2022 ஞாயிற்றுக்கிழமை நம்மவர்கள் முன்னிலையில் மங்கைநாயகர் - தேனம்மை அருளால் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : செ. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

மணமக்கள் நலமோடும், வளமோடும், சீரோடும், சிறப்போடும் வாழ வாழ்த்துகிறோம்.

**- தலைவர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**



# திருமணச் செய்திகள்



மணமக்கள் :

**செல்வன் P. பொன்கார்த்திக்** B.E.(Civil), M.Tech.

**செல்வி R. பாகப்பிரியாள்** B.Sc., MBA

மணமகன் பெற்றோர் :

திரு S. பொன்ராஜ் செட்டியார் - திருமதி சிவகாமி ஆச்சி, சிறுகுடி

மணமகள் பெற்றோர் :

திரு C. ராமசாமி செட்டியார்-திருமதி ராஜலட்சுமி ஆச்சி,கோவை.

நிகழ்விடம் :

சிறுகுடி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் மன்றம்.

திருமண நாள் : 09-12-2021, வியாழக்கிழமை



மணமக்கள் :

**செல்வன் SV. முத்துராமன்** B.B.A.CMA (Inter)

**செல்வி T.R. பூவரசி** B.E.B.A.(Hindi)

மணமகன் பெற்றோர் :

தெய்வத்திரு S. சிவலிங்கம் செட்டியார் -

நலமுடன் திருமதி மணிமேகலை ஆச்சி, மதுரை

மணமகள் பெற்றோர் :

T. ராஜேந்திரன் செட்டியார் - மீனாட்சி ஆச்சி, தஞ்சை.

நிகழ்விடம் :

பொன்னமராவதி மங்கைநாயகர் திருமண மண்டபம்

திருமண நாள் : 10-11-2021 புதன்கிழமை.

மணமக்கள் :

செல்வன் **மலை அலங்காரம்** (எ) **T. கோகுலன்** Dip.in Mechanical

செல்வி **S. ராகசுதா**

மணமகன் பெற்றோர் :

திரு M. தங்கராஜ் செட்டியார்–திருமதி கலாராணி ஆச்சி, கோவை

மணமகள் பெற்றோர் :

திரு சக்திவேல் செட்டியார் – தெய்வத்திருமதி மாலதி ஆச்சி

நிகழ்விடம் :

செல்வி ஹால் திருமண மண்டபம்,

கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்

மணநாள் : 06-03-2022 ஞாயிற்றுக்கிழமை


---

# ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமணத் தகவல் மையம்

கட்டணம் இல்லை! இலவச சேவை!

சமூகப் பெருமக்களே! பெற்றோர்களே!!

மணமகன் – மணமகள் தேவைக்கு உரிய விவரத்துடன் தபால் அனுப்புங்கள். வரிசை நம்பர் பதிவு ஏட்டில் பதிந்து கொண்டு திருமணம் கைகூட வழி காண்பிக்கிறோம். 18.07.2006–இல் தொடங்கிய இச்சேவையில் 2021–ஆம் ஆண்டு முடிய பதிவானது 546. இணைந்த தம்பதிகள் 404. காத்து இருப்பது ஆண்கள் (டிகிரி 99 + Plus 2-ல் 23) ஆக 122. பெண்கள் டிகிரி 20. பெண்கள் பதிவு மிக மிகக் குறைவு. பெண் வீட்டார்கள் முன்வந்து பதிவு அளித்து நமது சமூக–இனம் வளர்ந்திடவும், சமூகம் வளரவும் பெண்வீட்டார்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுகிறேன்.



**பிஎல்.ஆர், கோவை**

திருமுருகன் ஸ்டோர்ஸ்
நெ.18, M.K.G. LAY OUT,
I.T.I. பின்புறம் G.N. மில் P.O.
கோவை – 641 029
செல் : 99523 49855

குறிப்பு : விவாகரத்து – ஆண்கள் – பெண்களுக்கும் வாழ்க்கை கிடைத்திட உதவி செய்யப்படும்.

# நம்மவர்கள் கவனத்திற்கு

சமூகப் பெருமக்களே பெரியோர்களே!!

சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி வணங்குகிறேன்-சமூகப் பணியிலிருந்து விடை பெறலாம் என எண்ணுகிறேன்.

ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமண தகவல் மையம், கோவையில் 18-07-2006-முதல் இன்றுவரை சிறப்பாக நடந்து வருகிறது. காரணம் பெற்றோர்கள் கொடுத்த ஆதரவு தான். இச்சேவை தொடர்ந்து நடைபெற சேவை செய்யும் நம்மவர்களை நாடுகிறேன்.

2015-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் குரல் பக்கம் 37-ல் தெளிவான காரணம் காட்டி பொது நலச் சங்கமோ அல்லது அவர்கள் வழிகாட்டும் பிற சங்கமோ, சமூகச் சேவகர்களோ பொறுப்பு ஏற்குமாறு எழுதி உள்ளேன். இன்றுவரை எந்தப் பதிலும் இல்லை. வயது மூப்பு காரணமாக எமது அயித்தான் சாமியாடி ஜெகநாதன் அவர்கள் ஓய்வு பெற்றுள்ளார். எனக்கும் வயது 74-இல் அடி எடுத்து வைக்கும் நானும் ஓய்வு பெறும் நிலையில் உள்ளேன்.

எனவே இச்சேவையைப் பொறுப்பேற்க அ.வ.ந. பொதுநலச் சங்கமும், பிற சங்கங்களும் முன்வந்தால் பொறுப்புகளை ஒப்படைக்கிறேன்; தொடர்ந்து இச்சேவையை செய்ய வேண்டுகிறேன். கைகாட்டியாக இருக்காமல், வழிகாட்டியாக இருந்து, இணைப்புக்கு துணை நின்று வாழ வழிகாட்டியாக சேவை மனப்பான்மையாளர்களை தேடுகிறேன்.

நம்மவர்களுக்கும் இந்தச் சேவை தேவை என நினைத்தால் தகவல் தர வேண்டுகிறேன்.

**அன்புடன், பிஎல்.ஆர்., கோவை.**



### சிந்தனைக்கு......

செயல் நன்று. சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும் சிந்தனைகளாலும் நிரப்பு அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும், இரவிலும் உன் முன் நிறுத்து. அதிலிருந்து நல்செயல்கள் விளையும்.

**– சுவாமி விவேகானந்தர்**



உ

சிறுகுடி தெய்வத்திரு எம். சண்முகம் பி.இ.
அவர்களின் நல்லாசியுடனும்,
பொதுமக்களின் பேராதரவுடனும்
7-ஆம் ஆண்டாக வெற்றிநடை போடும்

# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## விற்பனை நிலையம்



**எங்களிடம் தங்கள் விசேஷத்திற்குத் தேவையான**



- பனீர்
- பட்டர்
- கோவா
- சீஸ்
- பால், தயிர்
- பேபிகார்ன்
- ஸ்வீட் கார்ன்
- ரெடிமேட் பூரி
- ரெடிமேட் புரோட்டா
- ரெடிமேட் சப்பாத்தி
- தண்ணீர் பாட்டில்
- ஐஸ்கிரீம்
- காளான் ஊறுகாய்
- ஸ்ரீதேவி பிரியாணி பேஸ்ட்
- Frozen Items

**ஆர்டரின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும்.**

S. **பழனியப்பன்** B.E., ✆ 90257 87637, 70107 91246



# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## நேரடி விற்பனை நிலையம்
**(மொத்தம் & சில்லரை விற்பனை)**

தலைமை தபால் நிலையம் எதிரில், ST கொரியர் அருகில்,
ஸ்கீம் ரோடு, திண்டுக்கல் - 624 001.

E-mail : archanaageneralsdgl@yahoo.in

## 2020-2021 ல் பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் 31.03.2021

**மாபெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **A.P. ஸேதுராமன் - விஜயலட்சுமி,** கோவை.
2. திரு. **செல்வன் R.M. செந்தில்,** பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. இராமநாதன் - சிவசக்தி** (செம்பதி) துபாய்.

**பெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் - பாப்பா ஆச்சி,** மதுரை.

**கொடை வள்ளல்கள் :**

1. திருமதி. **இராம. லதா அவர்கள்,** நத்தம்.
2. திரு. **து. அரவிந்த் குமார் B.E., M.S., - பத்மா B.E.,** சென்னை.
3. தெய்வத்திரு. **STKR. சக்திவேல் - ராஜலெட்சுமி,** பொன்னமராவதி.

**வள்ளல்கள் :**

1. திரு. **M. பாலகிருஷ்ணன் - பானுமதி ஆச்சி,** சிங்கம்புணரி.
2. திரு. **செ. ஆசை அலங்காரம் குடும்பத்தார்,** சிறுகுடி.
3. திரு. **M.S. முருகப்பன்,** பொன்னமராவதி.
4. திரு. **சொ. முருகேசன் - கவிதா,** சிவகாசி.
5. திரு. A. முருகன் - செல்வமணி நீடாமங்கலம்
6. திரு. T.M.R.S. சிவக்குமார் - அருணோதயம், கோவை
7. திரு. ம.சி.கு.கு. கணேசன் செட்டியார் - தென்னசரசி ஆச்சி கோவை

**6-12 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் நன்கொடையாளர்கள்**

1. **சிங்கம்புணரி மீனாட்சி நல்லதம்பி வலச்சேரிப்பட்டி தெய்வானை வள்ளியப்பன்** நினைவாக அவந பொதுநலச்சங்கம், பிரான்மலை.
2. தெய்வத்திரு. **மு.அ. பரமசிவம் செட்டியார் - அங்கம்மாள் ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் - பாப்பா ஆச்சி** குடும்பத்தார், மதுரை.
4. திரு. **தே.மா. பழனிச்சாமி செட்டியார் - பழ. சரஸ்வதி ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
5. தெய்வத்திரு. **தீ.பழ. பொன்னுச்சாமி செட்டியார் - அன்னமயிலி ஆச்சி** நினைவாக **A.P. ஸேதுராமன் - விஜயலட்சுமி,** கோவை.

**தங்கப்பதக்கம் வழங்கும் நன்கொடையாளர்கள் : 10ஆம் வகுப்பு**

1. முதல் கல்வி காவலர் நினைவாக, கல்விக்காவலர், கல்வி தாய் தந்தை சுப.நேசமணி செட்டியார் - புவனேஸ்வரி ஆச்சி சார்பாக கேப்டன். நே. சரவணன் பிரியா - சச்சின் நங்கநல்லூர் - சென்னை - 61
2. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்,** கோவை.
3. திரு. **ஆ. ஆறுமுகம் - சாந்தி,** கோவை.

**12ஆம் வகுப்பு**

4. திரு. **அரு.சோம. சண்முகநாதன் - சிவகாமி,** தூத்துக்குடி.
5. முதல் கல்வி காவலர் நினைவாக கல்விகாவலர். சுப. செல்வம் செட்டியார் ஆனந்தம் ஆச்சி சார்பாக செ.இளவரசன் - விசாலா. நங்கநல்லூர், சென்னை - 61

# புதிய கல்விக்காவலர்கள்

**கல்விக்காவலர்-38**



கழனிவாசலூருடையார்
**திரு.V. லெட்சுமணன்செட்டியார்**
**பாக்கியலட்சுமிஆச்சி**
கிருங்காக்கோட்டை

**பெற்றோர் :** திரு சொ.வைத்திங்கம் செட்டியார் - திருமதி அழகு ஆச்சி

**மாமனார்-மாமியார் :**
திரு. சிவசாமி செட்டியார்-குஞ்சரம் ஆச்சி, பூசாரிபட்டி

**உடன்பிறந்தவர்கள் :**

1. தெய்வத்திரு V.மங்கைபாகன்செட்டியார்-நலமுடன் பொன்னழகுஆச்சி
2. தெய்வத்திரு V. வைத்திங்கம்செட்டியார் - பாஞ்சாஆச்சி
3. தெய்வத்திரு V. ராமன்செட்டியார் - மங்களம்ஆச்சி
4. தெய்வத்திரு V. பரமசிவம்செட்டியார் - நலமுடன்கலாதேவிஆச்சி
5. திருV.ஆறுமுகம்செட்டியார்-சாந்தாஆச்சி, கோவை.

**கல்விக்காவலர்-39**



**மேலூருடையார்**
**தே.மா.சுப்பையா செட்டியார்**
**சுப. பூங்கோதை ஆச்சி,**
பொன்னமராவதி.

**பெற்றோர் : திரு தே. மாணிக்கம் செட்டியார் தேனம்மாள் ஆச்சி**

**பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் மகள்கள் :**

1. திருமதி. **M.மாலதி** D. Pharm - திரு. **PL. முருகேசன்**
   **ஸ்ரீ முருகன் மெடிக்கல்ஸ்,**
   N.G.G.O. காலனி, கோவை-22.
2. திருமதி. **S. ஜெயந்தி**-திரு. **A. சண்முகநாதன்,**
   **நாகம்மாள் நோட்புக்ஸ்,** செல்வபுரம், கோவை-26

**கல்விக்காவலர்-40**



பாளையூர் அம்பலம் கொண்டார்
**திரு ந. மாணிக்கம் செட்டியார் -**
**திருமதி சுசீலா ஆச்சி,**
தஞ்சாவூர்.

**கல்விக்காவலர் குடும்பத்தினர்**

பெற்றோர் : தெய்வத்திரு A. சேதுராமன் செட்டியார் - நலமுடன் திருமதி சரோஜா ஆச்சி.

மகன் - மருமகள் :
திரு. M. அண்ணமலை - திருமதி. பவித்ரா.
பேத்திகள் மஹிரப்பிரியாள் & மிதுரப்பிரியாள்

மகள்-மருமகன் :
திருமதி S. அன்பு பிரியா - திரு S. சரவணன்.
பேத்தி யாஷினி.

**கல்விக்காவலர்-41**



கமுகக்கூருடையயார்
**திரு. தேனப்பன் செட்டியார் -**
**திருமதி சந்திரா ஆச்சி**
கோவை.

**கல்விகாவலர் குடும்பத்தினர்**

**பெற்றோர் :** கிருங்காக்கோட்டை கமுகக்கூருடையயார் தே. சொக்கன் செட்டியார்-மீனாட்சி ஆச்சி

**தேனப்பன் செட்டியார் சகோதரர்கள் / சகோதரி :**
பழனியப்பன் செட்டியார், சுப்பையா செட்டியார், ஞானம் & சகோதரி அழகு மீனாள் சிவலிங்கம். கோவை தேனப்பன்

**சந்திரா ஆச்சி சகோதரர்கள், சகோதரி :**
திரு. காசி அலங்காரம் செட்டியார், திரு. தர்மலிங்கம் செட்டியார், திரு. ராமசாமி செட்டியார், சகோதரி திருமதி சீதாலெட்சுமி ஆச்சி.

## மத்திய அரசுப் பணியில் நம்மவர்



திருச்சி நமது இனிய நண்பர் திரு M. செல்லம் செட்டியார் முன்னாள் கல்வி வளர்ச்சிக் கழகச் செயல்வீரர் அவர்களது புதல்வர் **திரு மா.செ. கௌரிசங்கர்** அவர்கள் நம்மவர்களில் முதன் முதலாக மத்திய அரசுப் பணியில், இந்த இளம் வயதில் சுருக்கெழுத்தாளர் நிர்வாகப் பணியில் தமிழகத்திலே ஒரே நபராக, முதல் மாணவராகத் தேர்வு பெற்று ஹைதராபாத்தில் பணியில் சேர்ந்துள்ளார். அவர்களது பணி சிறக்கவும், மென்மேலும் பதவி உயர்வு பெற்று நீள் ஆயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞ்ஞானம் பெற்று வாழ்வாங்கு வாழ அருள்மிகு மங்கைபாகரை வேண்டி வணங்குகின்றோம்.

**– திரு A.P. ஸேதுராமன் குடும்பத்தினர் மற்றும் அ.வ.ந. சங்கம், கோவை, அ.வ.ந. இ. பேரவை மற்றும் அனைத்து நிர்வாகிகள், கோவை.**

மத்திய அரசு பணியில் சேர்ந்துள்ள திரு மா.செ. கௌரிசங்கர் அவர்களைப் பாராட்டுவதில் கல்வி வளர்ச்சிக் கழகம் பெருமை கொள்கிறது. அவர் தமது பணியில் சிறக்கவும், பல உயர் பதவிகளைப் பெறவும் வாழ்த்துகிறேன்.

**– செ. ஆசை அலங்காரம், தலைவர்,கல்வி வளர்ச்சிக் கழகம்.**

## நன்றிக் கடிதம்

நான் முனைவர் பட்டம் பெற்றதைப் பாராட்டும் விதமாக 25-12-2021 அன்று கல்வி வளர்ச்சிக் கழக ஆண்டு விழாவில் சாதனையாளராகப் பாராட்டி, பாராட்டிதழ், கேடயம் மற்றும் புத்தகங்கள் வழங்கி என்னையும் என் கணவரையும் மேடைக்கு அழைத்து பெருமைப்படுத்தினீர்கள்.

கூடுதல் முயற்சியாக பரிசாக வழங்கிய புத்தகத்தின் உள்பக்கம் பாராட்டிதழின் நகலை அச்சிட்டு ஒட்டி என்றும் நினைவில் இருக்கும்படி தலைவர், செயலாளர், பொருளாளர் மூவரும் கையெழுத்திட்டு கொடுத்திருப்பது என்னை மிகவும் பெருமைப்படுத்துவதாக உணர்கிறேன். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னை நகரத்தார் குரல் ஆசிரியர் குழுவில் சேர்த்திருப்பதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்வேன். நன்றி. வணக்கம்.

**– முனைவர் சூரியகலா, புதுக்கோட்டை**

# கல்வி உதவித் தொகை, கல்விக்கடன் பெற சிபாரிசு செய்யத் தகுதியுள்ளவர்கள்

1. மாபெரும் கொடை வள்ளல்கள்
2. பெருங்கொடை வள்ளல்கள்
3. கொடை வள்ளல்கள்
4. வள்ளல்கள்
5. கல்விகாவலர்கள்
6. சங்கத் தலைவர்கள்
7. புரவலர்கள்

மேலே குறிப்பிட்டவர்களைத் தவிர மற்றவர்களிடம் சிபாரிசு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உகந்ததல்ல. நிராகரிக்க ஏதுவாகும்.

சிபாரிசு செய்பவர்களின் கையெழுத்திற்கு கீழே **(மேற்குறிப்பிட்ட ஏழில் ஒன்று)** அவர்களின் **பெயர், பதவி செல்போன் நம்பர்** ஆகியவைகளை அவசியம் குறிப்பிட வேண்டும்.

அன்புகூர்ந்து மாணவர்களும், பரிந்துரை செய்பவர்களும் இந்நடைமுறையை அவசியம் கடைப்பிடிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன். கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக் கடன் மனுக்களின் பரிசீலனைக்கு இத்தகவல் அவசியமானதாகும்.

**– தலைவர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**



## *சிந்தனைக்கு....*

யாருக்கும் உன்னை பிடிக்கவில்லை என்றால்
நீ இன்னும் நடிக்கக் கற்றுக்கொள்ளவில்லை
அல்லது உனக்கு நடிக்கத் தெரியவில்லை
என்பதுதான் உண்மை.

**– நிவேதா B.Tech 1st Year, மதுரை**

# அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகச் செயலாளர் தேர்வு

13-02-2022 அன்று பிரான்மலை மங்கைநாயகர் மன்றத்தில் அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத்தில் காலியாக இருந்த செயலாளர் பதவிக்கு இடைத் தேர்தல் நடைபெற்றது. அ.வ.ந. பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் செட்டியார் அவர்கள் தேர்தல் ஆணையராகவும், தணிக்கையாளர் திரு பொன். சிவஞானம் செட்டியார் அவர்கள் துணை தேர்தல் ஆணையராகவும் பொறுப்பேற்று தேர்தலை நடத்தினார்கள்.

இந்த இடைத் தேர்தலில் வா.புதூர் / (இருப்பு) பொன்னமராவதி திரு மு. இராமலிங்கம் செட்டியார் M.A., B.Lit., B.Ed. அவர்கள் செயலாளராக 2022 & 2024 வரை மூன்று ஆண்டுகளுக்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள்.

**– செ. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

---

**கொட்டாம்பட்டியில் ஓர் இனிய உதயம்**
**5.3.2020 முதல் - பேருந்து நிலையம் எதிரில்**




பொன்னமராவதியில்
முதன் முறையாக
கோயில் பாரம்பரிய ஸ்தாபனம்
திருமண அழைப்பிதழுக்கான EXCLUSIVE ஷோரூம்
அருளரசு A/C கார்ட்ஸ்
அன்பு ! ஆனந்தம் !! அருளரசு !!!
ONLINE PURCHASE WITH SPL DISCOUNT FOR OUR AVN GROUP
WEDDING CARDS
RECEPTION CARDS
MULTICOLOR CARDS
SCREEN / FOIL CARDS
விதவிதமான தாம்பூலப் பைகள்
ALL OCCASIONS INVITATION CARDS
COMPLIMENTARY ITEMS
CUSTOMISED CARDS
9865119115
9842119115
நாட்டுக்கல் மெயின் ரோடு, பொன்னமராவதி.

# கண்ணீர் அஞ்சலி

திருபுவனம், ஓடக்கரைத்தெரு

**M.ராஜேந்திரன் M.பூமிநாதன்**

இவர்களின் தகப்பனாருமான



## முத்து பழனி செட்டியார் அவர்கள்

14.12.2021 இரவு 10.15 மணியளவில்
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த
வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்

கண்ணீருடன்...

**குடும்பத்தினர்கள் & நண்பர்கள்**

ஓடக்கரைத் தெரு, திருபுவனம்

# முதலாம் ஆண்டு

# நினைவு அஞ்சலி

தோற்றம்
**01-04-2011**

மறைவு
**27-01-2021**



## தெய்வத்திரு **தங்கம்மாள்** என்கிற **சஹானா**

இந்த மண்ணை விட்டுப்பிரிந்து ஓராண்டாகியும்
எங்கள் மனதை விட்டுப் பிரியாத செல்லமே!
எங்கள் நெஞ்சங்களில் அன்பை வளர்த்த நீ
ஏன் எங்கள் கண்களில் கண்ணீரை வளர்த்தாய்?

என்றும் நினைவுகளுடன்

**P. அசோகன் செட்டியார் – ஜெயலதா ஆச்சி**

**குடும்பத்தினர்**

வெங்கிட்டாபுரம், கோயமுத்தூர்

# 3 -ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01.01.1936



மறைவு
27.03.2019

## சிறுகுடி செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் (எ) சேதுராமன் செட்டியார்

உழைப்பால் உயர்ந்த ஊர் போற்றும் உத்தமரே!
உழைப்பாளிக்கும் உணவளித்த பார்போற்றும் பண்பாளரே!
இல்லறத் துணைவிக்கு முன்னேற்றம் என்றும் தந்தவரே!
பெற்ற மக்களின் உயர்வில் மகிழ்ச்சி மிகக் கொண்டவரே!
பேரன் பேத்திகளின் மனம் நிறைந்த ஆசை அய்யாவே!
சொந்தங்கள் துயர் நீக்க உறுதுணாய் நின்றவரே!
நல்லவரே! வல்லவரே! அன்பு உள்ளம் கொண்டவரே!
சிக்கனமாய், பேராசைகளை துறந்தோனாய்,
சேதுராமனாய், செட்டிக்கென இலக்கணமாய் வாழ்ந்தவரே!
அலங்காரம் என பொன்னான பெயர் பெற்ற அற்புதமே!
அனுதினமும் உன்னை நினைத்து துதி பாடுகின்றோமே!

என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்

மனைவி: **திருமதி அ. செம்பாயி ஆச்சி**

மகள்கள்:

திருமதி **திலகம் இளங்கோ**

திருமதி **யோகாம்பாள் (எ) கீதா திருவாசகம்**

பேரன், பேத்திகள்:

திருமதி **E. நாகேஸ்வரி (எ) சுகண்யா** B.E., M.S. (USA)


**N.J. ராகுல்கண்ணா** B.E., M.S. (USA)

**E. நாகார்ஜுன்** B.E.,

**T.Y. வித்யஸ்ரீ** B.A.(Hindi) **N.J.R. ஆராத்யா** (USA)



# சிவபாதம் சேர்ந்தார்



பாதம்பர மன்னவர் சூழ்ந்து, பணிந்து போற்ற
ஏதம் பிணியா வகை, இவ்வுலகு ஆண்டு, தொண்டின்
பேதம் புரியா அருள் பேரரசு ஆளப் பெற்று,
நாதன் கழல் சேவடி நண்ணினார் அண்ணலாரே. – திருமுறை

தங்களது உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு இறைவனடி சேர்ந்தோர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகிறோம். – குரல் நிர்வாகம்



பொன்-புதுப்பட்டி தெய்வத்திரு மு அ. பொன்னலங்காரம் செட்டியார் அவர்களின் மனைவியும், திருவாளர்கள் பொ. குணசேகரன், பொ. அருணகிரிநாதன் மற்றும் பொ. சாமிநாதன் இவர்களின் தாயாருமாகிய திருமதி **சிவகாமி ஆச்சி** அவர்கள் 27-12-2021 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**– தகவல் : பொ. அருணகிரிநாதன், பொன்னமராவதி**




புழுதிபட்டி ராசு செட்டியார் மனைவியும் திரு சோலைராஜன் செட்டியார் அவர்களின் தாயாருமான திருமதி **பாக்கியம் ஆச்சி** அவர்கள் 21-01-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**– தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

பொன்னமராவதி அரசு மெடிக்கல்ஸ் உரிமையாளர் தெய்வத்திரு. இராம. சதாசிவம் செட்டியார் அவர்களின் மனைவியும் திரு Rm.S. ராஜா, திரு S. மணிகண்டன் அவர்களுடைய தாயாருமான திருமதி. **S. விசாலாட்சி ஆச்சி** 30.01.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

தகவல் : திருமதி. கவிதா முருகேசன், சிவகாசி.



பூர்வீகம் சொக்கம்பட்டி காந்தி செட்டியார் மகனும், மதுமதி வினோத் இவர்களின் தகப்பனாருமான திரு **கா. மகுடபதி செட்டியார்** (வயது 59) அவர்கள் 06-02-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். **– தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

சொக்கம்பட்டி தெய்வத்திரு தியாகராஜன் செட்டியார் அவர்களின் மனைவியும், தஞ்சாவூர் M. ஜெகநாதன் செட்டியார் – யோகாம்பாள் ஆச்சி இவர்களின் மாமியாருமான திருமதி **தி. வசந்தா ஆச்சி** அவர்கள் 10-02-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**



புமுதிபட்டி திரு MSS. தேவராஜன் செட்டியார் அவர்களின் மனைவியும், திரு முத்தாண்டி செட்டியார் அவர்களின் தாயாருமான திருமதி **சரோஜா ஆச்சி** 11-03-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : வாட்ஸ் அப் செய்தி**



சிறுகுடியைப் பூர்வீகமாகக் கொண்ட கோவை, வடவள்ளி திரு திருவப்பன் செட்டியார் அவர்களின் மகன் திரு **T. நாகராஜ் செட்டியார்** அவர்கள் (வயது 50) 09-03-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

# மனமுதிர்ச்சி என்றால் என்ன?

1. மற்றவர்களை திருத்துவதை விட்டுவிட்டு நம்மைத் திருத்திக் கொள்வது.
2. அனைவரையும் அப்படியே (குறை நிறைகளுடன்) ஏற்றுக் கொள்வது.
3. மற்றவர்களின் கருத்துக்களை அவர்கள் கோணத்திலிருந்து புரிந்து கொள்ளுதல்.
4. எதை விட வேண்டுமோ அதை விடப் பழகிக் கொள்ளுதல்.
5. மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதை விடுதல், அதனால் ஏற்படும் ஏமாற்றத்தையும் விடுதல்.
6. செய்வதை மன அமைதியுடன் செய்வது.
7. நம் புத்திசாலித்தனத்தை மற்றவர்களிடம் நிரூபிப்பதை விடுவது.
8. நம் செயல்களை மற்றவர் ஏற்க வேண்டும் என்ற நிலையை விடுதல்.
9. மற்றவர்களுடன் நம்மை ஒப்பிடுவதை விடுதல்.
10. எதற்குமே சஞ்சலப்படாமல் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முயற்சித்தல்.
11. நம் அடிப்படை தேவைக்கும், நாம் அடைய விரும்புவனவற்றிற்கும் உள்ள வேறுபாட்டினை உணர்தல்.
12. சந்தோசம் என்பது பொருள் சம்பந்தப்பட்டது அல்ல மனம் சம்பந்தப்பட்டது என்ற நிலையை அடைதல்.

**மேற்கண்டவைகளை கடைப்பிடிக்க முயற்சித்தால் வாழ்க்கை எளிதாகி விடும்.**

**– குரல் ஆசிரியர் குழு**

# அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம் திண்டுக்கல்

அன்பார்ந்த அருவியூர் நகரத்தார் பெருமக்களுக்கும் மேலும் அனைத்து ஊர் அ.வ.ந. சங்கங்களுக்கும் மேற்படி சங்கங்களின் பொறுப்பாளர்களுக்கும் திண்டுக்கல் சங்கத்தின் அன்பான வேண்டுகோள்.

திண்டுக்கல் சங்கத்தின் கடன்கள் மற்றும் மாநகராட்சி வரி போன்றவற்றை முற்றிலும் நிவர்த்தி செய்ய திண்டுக்கல் சங்கத்திற்குப் பாத்தியப்பட்ட மங்கைநாயகர் திருமண மண்டபத்தை 5 ஆண்டு காலத்திற்கு வாடகைக்கு விடுவதென 05-02-2022 கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் நகரத்தார் மற்றும் அனைத்து ஊர் நகரத்தார் மற்றும் சங்கங்களுக்கு மட்டும் விடுவதென முடிவு செய்யயப்பட்டுள்ளது.

- அதிகபட்ச வாடகை காலம் ஐந்து ஆண்டுகள்
- அதிகபட்ச மாதவாடகை ஐம்பதாயிரம்
- அதிகபட்ச முன் வைப்புத்தொகை 30,00,000/-
  (ரூபாய் முப்பது லட்சம்)

விருப்பமுள்ளவர்கள் 15-03-2022 தேதிக்குள் தொடர்பு கொள்க

நன்றி

நிர்வாகிகள்
திண்டுக்கல் அ.வ.ந. சங்கம்

தொடர்புக்கு
M. மாணிக்கம் 98945 27433
T. பரமானந்தம் 92452 86613
P. சிவநேசன் 94420 29602
G. ரவிக்குமார் 99944 44380
சட்ட ஆலோசகர் : திரு G. ராமதுரை அவர்கள்

## அருவியூர் வடக்குவளவு நகரத்தார்
## இளைஞர் பேரவை பொன்னமராவதி

# 33–ஆம் ஆண்டு தமிழர் திருநாள் விழா

பொன்னமராவதி அ.வ.ந. இளைஞர் பேரவையின் 33-ஆம் ஆண்டு தமிழர் திருநாள் விழா 13-02-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பொன்னமராவதி மங்கைநாயகர் மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அ.வ.ந. இளைஞர் பேரவைத் தலைவர் திரு R. மணிகண்டன் அவர்கள் தலைமை ஏற்க, அ.வ.ந. இளைஞர் பேரவை செயலாளர் திரு S. சுரேஷ் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். பிரான்மலை அ.வ.ந. பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் செட்டியார் அவர்களும், பொன்னமராவதி அ.வ.ந. சங்கத் தலைவர் திரு M. இராமசாமி செட்டியார் அவர்களும் விழாவிற்கு வருகை தந்து வாழ்த்துரை வழங்கி விழாவை சிறப்பித்தார்கள்.

விழாவில் பொன்னமராவதி அ.வ.ந. சங்கச் செயலாளர் திரு M. சரவணன் செட்டியார் அவர்களும், பொருளாளர் திரு C. செந்தில்குரு செட்டியார் அவர்களும் துணைத் தலைவர் திரு PL. ராமஜெயம் செட்டியார் அவர்களும், இணைச் செயலாளர் திரு ST.KR.S. சுந்தரமூர்த்தி செட்டியார் அவர்களும், துணைச் செயலாளர் திரு PPC. ராஜா செட்டியார் அவர்களும், ஆலோசகர் அறமனச்செம்மல் திரு அரு.வே. மாணிக்கவேலு செட்டியார் அவர்களும், பொன்னமராவதி அ.வ.ந. மாதர் சங்கத் தலைவர் திருமதி ஜெ. கற்பகம் ஆச்சி அவர்களும், செயலாளர் திருமதி S. மோகனா ஆச்சி அவர்களும், பொருளாளர் திருமதி PL. ஆனந்தி ஆச்சி அவர்களும் கலந்து கொண்டார்கள்.

கல்வி வளர்ச்சிக் கழகச் செயலாளராக புதிதாக தேர்ந்தெடுக்கப்பெற்ற திரு மு. இராமலிங்கம் M.A., B.Lit., B.Ed. அவர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். அ.வ.ந. இளைஞர் பேரவை பொருளாளர் திரு N.

தண்டாயுதபாணி அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

விழா தொடக்கமாக கொரோனா பெருந்தொற்றிலிருந்து முழுமையாக விடுபடவும், நம் இன மக்களின் நல் வளர்ச்சிக்காகவும் சிறப்பு திருவிளக்கு பூஜை நடைபெற்றது. நிகழ்ச்சி அமைப்பு அ.வ.ந. மாதர் சங்கம். இதனைத் தொடர்ந்து கோலப்போட்டி, ஆர்ட் from வேஸ்ட், ஓவியப் போட்டி, சிறுவர் சிறுமிகளுக்கான ஓட்டப்பந்தயம், கூடையில் பந்து எறிதல், பாட்டிலில் தண்ணீர் நிரப்புதல், பானை உடைத்தல், மாதிரி பலூன் உடைத்தல், சுழற்கட்டம், இளைஞர்களுக்கான கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இரவு 8-00 மணிக்கு இரவு விருந்து அறுசுவையுடன் வழங்கப்பட்டது. அதிர்ஷ்டப்பரிசு குலுக்கலின் போது மன்றத்தில் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

**– தகவல் திரு N. தண்டாயுதபாணி, பொருளாளர், அ.வ.ந. இளைஞர் பேரவை, பொன்னமராவதி**


உ
சிவமயம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

திருஞான சம்பந்தர் அருளிய
திருக்கொடுங்குன்ற பதிகம்

குரல் சிறக்க வாழ்த்துக்கள்

**அன்புமணி மெடிக்கல்**

**சின்னக்கடை வீதி, 260, அண்ணாசாலை,**
**பொன்.புதுப்பட்டி, பொன்னமராவதி.**
**போன் : 04333 260285, செல் : 94423 58165**

# திரு K. சிவநேசன் கட்டுரைக்கு வரவேற்பு கடிதம்



நமது கல்வி வளர்ச்சிக் கழகத்தின் முன்னாள் செயலாளர் திரு கே. சிவநேசன் அவர்கள் வாருங்கள் தொழில் செய்வோம்! முன்னேறுவோம்! என்கிற தலைப்பில் கடந்த ஜனவரி 2022 நகரத்தார் குரலில் நமது சமுதாய மக்களுக்கு அழைப்பு விடுத்து ஒரு அருமையான கட்டுரை எழுதி இருந்தார். நம் சமுதாய மக்களும் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று முன்னேற வேண்டும் என்கிற எண்ணத்தில் அக்கருத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட இக்கட்டுரையை தொழிலில் வெற்றி பெறத் தேவையான அனைத்து அம்சங்களையும் மிகவும் நுட்பமாக அலசி ஆராய்ந்து வழங்கியிருப்பது மிகுந்த பாராட்டுக்கும், வரவேற்பிற்கும் உரியது. நம்மை விடப் பொருளாதார நிலையில் பின்தங்கியிருந்த பல சமூகத்தவர்கள் எல்லாம் கூட்டு முயற்சியில் தொழில் தொடங்கி வெற்றி பெற்று வளர்ச்சியடைந்துள்ளதை எல்லாம் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி என்பது அச்சமுதாய மக்களின் கல்வி நிலையையும், பொருளாதார நிலையையும் கொண்டு தான் மதிப்பிடப்படுகிறது. சமுதாய அந்தஸ்து என்பதும் இதனைக் கொண்டே மதிப்பீடு செய்யப்படுகிறது. நமது பங்காளி சமுதாயமான நாட்டுக்கோட்டை நகரத்தார்களும், நாமும் காவேரிப்பூம்பட்டிணத்தில் ஒன்றாகவே வாழ்ந்தோம். நம்மைப் போன்றே அவர்களும் தன வணிகர்களாக வணிகம் செய்து வந்தார்கள். இன்று இந்திய அளவில் ஏன் உலக அளவில் அவர்களை நாம் பார்த்து வியக்கக் கூடிய அளவில் அனைத்துத் துறைகளிலும் பிரம்மிக்கத்தக்க அளவில் வளர்ந்துள்ளார்கள். நம்மிடம் அறிவு, ஆற்றல், திறமைகள் இருந்தும் நாம் மட்டும் ஏன் அப்படியே வளர்ச்சியடையாமல் இருக்கிறோம். நம்மிடம் தன்னம்பிக்கையும், துணிவும், கூட்டு முயற்சியும்,

சமுதாயத்தைப் பற்றிய சிந்தனையும் இல்லாதது முக்கிய காரணங்களாகும். சமுதாய முன்னேற்றத்தை எதிர்நோக்கி எழுதியுள்ள அவரின் நல்ல சிந்தனையை வரவேற்கிறேன். அவரின் இம்முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன். அவரின் இக்கட்டுரையைப் படிக்கும்போது எப்போதோ படித்த ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு முனிவர் தனது சீடர்களுக்கு குருகுல வாழ்க்கை முறையில் அனைத்து கலைகளையும், நீதி நெறிகளையும் போதித்து ஆசிரமத்தை நடத்தி வந்தார். தனக்குப் பின் தனது ஆசிரமத்தின் தலைமைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு ஆசிரமத்தில் இருக்கும் சீடர்களில் திறமையான ஒருவரை தேர்வு செய்ய விரும்பியதால் தனக்கு அடுத்த நிலையில் இருக்கும் ரமணன், கௌசிகன் ஆகிய இருவரில் திறமையான ஒருவரைத் தேர்வு செய்ய சித்தமானார். அவர்கள் திறமைகளைப் பரிசோதிக்க விரும்பினார். அவர்கள் இருவரையும் தனித்தனியே அழைத்து இன்னும் ஒரு மாத காலத்திற்குள் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள வறியவர்கள் 200 பேருக்கு அன்னதானம் வழங்க வேண்டும். அதற்கு அவர்களிடமிருந்து மட்டுமே நன்கொடைகள் பெற வேண்டும். செல்வந்தர்கள் யாரிடமும் நன்கொடைகள் பெறக்கூடாது. மேலும் அவர்களிடமிருந்து பெறும் நிதியில் அன்னதானம் வழங்கியது போக அதில் மிச்சப்படுத்தி 200 வராகனை ஆசிரமத்திற்கு வழங்க வேண்டும் என நிபந்தனைகளை விதித்து தன் கட்டளையை நிறைவேற்ற பணித்தார். சீடர்கள் இருவரும் வெவ்வேறு தேசத்திற்குப் பயணித்தார்கள்.

ஒரு மாத முடிவில் முதலில் கௌசிகன் ஆசிரமத்திற்கு திரும்பினார். வறியவர்களிடம் தானம் கேட்டால் என்னை ஏளனம் செய்கிறார்கள். உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா? நாங்களே மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள வறியவர்கள், எங்களைப் பார்த்து தானம் கேட்பது பிச்சைக்காரர்களிடம் பிச்சை கேட்பதற்கு சமம் எனக் கூறி கேலி செய்கிறார்கள். இது எனக்கு மிகவும் அவமானமாக இருந்தது. நீங்கள் இட்ட

பணியை என்னால் செய்ய முடியவில்லை என மிகுந்த வருத்தத்துடனும், வாட்டத்தோடும் தெரிவித்தார்.

அடுத்த சில மணித்துளிகளில் ரமணன் அரசு பிரதிநிதிகள் புடை சூழ, அரசுப் பரிவாரங்களுடன் கம்பீரமாக ஆசிரமத்திற்குள் நுழைந்து, 200 வராகன் பணமுடிப்பை தன் குருநாதர் முன் வைத்தார். உன்னால் இது எப்படி சாத்தியமாயிற்று என்று வினவினார். வறியவர்கள் தான் தானம் கொடுக்க வேண்டும் என்றால் முதலில் அதற்கான வசதிகள் அவர்களுக்கு இருக்க வேண்டும் என முடிவு செய்தேன். அந்த நிலைக்கு அவர்களை உயர்த்த பலவகையான முயற்சிகளை மேற்கொண்டேன். இரவு பகலாக முயற்சித்து வறியவர்களில் 200 திறமையானவர் களைத் தேடி அடையாளம் கண்டேன். அவர்களின் திறமைகளை நன்றாகத் தெரிந்து கொண்டேன். இத்தருணத்தில் இளவரசருக்கு முடி சூட்டு விழா கொண்டாடப்பட இருப்பதை அறிந்தேன். தான் தேர்ந்தெடுத்த 200 வறியவர்களின் திறமைகளை மன்னரிடம் விளக்கிக் கூறி இளவரசரரின் முடிசூட்டு விழாவில் அவர்கள் களப்பணி ஆற்ற அனுமதி கோரினேன். நான் அளித்த விளக்கங்களால் திருப்தி அடைந்த மன்னர் என் விண்ணப்பத்தை ஏற்று, அவர்கள் 200 பேரும் களப்பணியாற்ற அனுமதி அளித்தார். அவர்கள் தங்கள் திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தி களப்பணியாற்றியதால் மன்னர் மனம் மகிழ்ந்து அவர்கள் 200 பேருக்கும் தலா 10 வராகன் சன்மானம் வழங்கினார். அதனால் அவர்கள் 200 பேரும் சந்தோஷமாக இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த எனக்குத் தலா 2 வராகன் தானமாகக் கொடுத்தார்கள். அதில் அவர்களுக்கு கொடுத்த அன்னதானச் செலவு போக மீதம் 200 வராகன் தான் இந்த பண முடிப்பு என விளக்கமளித்தார்.

ரமணனின் முயற்சிகள் பாராட்டுக்குரியது. அவர் கண்டறிந்த 200 வறியவர்களும் நல்ல திறமைசாலிகள். அதனால் அவர்களை எனது அரண்மனையில் பணியமர்த்துகிறேன் என்று ஆசிரமத்திற்கு ரமணனுடன் வந்த

மன்னர் தெரிவித்ததோடு அவர்களை அடையாளம் காட்டிய ரமணனைப் பாராட்டி பரிசுகள் வழங்கி கௌரவித்தார். முனிவருக்கு மெய் சிலிர்த்தது. ஒரே மாதத்தில் 200 வறியவர்களின் வாழ்க்கையை வளமாக மாற்றியமைத்த ரமணனே தன் ஆசிரமத் தலைமைப் பொறுப்பிற்குச் சரியானவர் என தீர்மானித்தார். நமது ஆளுமைத் திறனை மெருகேற்றுவதில் பெரும்பங்கு வகிப்பது நமது முயற்சிகளும், அதற்கான தேடல்களுமேயாகும். சீரிய சிந்தனையுடனும், பொதுநல நோக்குடனும் நாம் எடுக்கும் முயற்சிகள், நம்மை மட்டுமின்றி நம்மைச் சார்ந்தவர்களையும் பெருமளவு வளர வைக்கும் என்பது திண்ணம்.

பல தொழில் நிறுவனங்களை நடத்தி வரும் திரு கே. சிவநேசன் அவர்கள் நல்ல ஆளுமைத்திறமையுள்ளவர். சமுதாய நோக்கோடு அவர் எடுத்துள்ள இம் முயற்சியில் உறுதியாக அவர் வெற்றி பெறுவார் என நம்புகிறேன். அவரின் இம்முயற்சிக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வரவேற்பும் அளிக்க வேண்டியது நமது சமுதாயக் கடமையாகும். அவர் ஒரு லட்ச ரூபாய் முதலீடு செய்யும் வாய்ப்புள்ள 100 பேரைத் தேடி இந்த முயற்சியை ஆரம்பித்துள்ளார். பலர் முதலீடு செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார்கள். அதாவது கிட்டத்தட்ட பாதிக்கிணறு தாண்டிவிட்டார். மீதி கிணறு அவர் தாண்ட வேண்டும். அதற்குத் தடையாக இருப்பது நம்மிடம் இருக்கிற பணத்தை விட்டுவிடக் கூடாது என்கிற பயமும், தயக்கமும், தன்னம்பிக்கை இன்மையுமே. நம்மை விட பன்மடங்கு கீழ்நிலையில் (பொருளாதாரத்தில்) இருந்தும் பல சமுதாயங்கள் வெகுவேகமாக வளர்ந்து முன்னேறி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். நம் சமுதாயத் தலைவர்கள், வழிகாட்டிகள் சமுதாய நோக்கோடு எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது, அவர்கள் மீது நம்பிக்கை கொள்வது, அம் முயற்சிகள் வெற்றிபெற கை கொடுக்கும். அவர்களோடு இணைந்து பயணிப்பது இவையே நாம் செய்ய வேண்டியவை ஆகும். நம்மிடம் அறிவு, ஆற்றல், திறமைகள் இருக்கிறது. நம்மிடமுள்ள தயக்கத்தை தூக்கி எறிவோம். நம்பிக்கையோடு

பயணிப்போம். நம் சமுதாயத்தில் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த அவரோடு துணை நிற்போம். வெற்றி பெறுவோம்! வளர்ச்சி அடைவோம்! திரு கே. சிவநேசன் அவர்களின் சமுதாய நோக்கோடு கூடிய நல்ல சிந்தனையைப் பாராட்டுகிறேன். அவரின் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

வரும் சுபகிருது ஆண்டு வைகாசி மாத்தில் ஒரு நல்ல நாளில் இத்தொழில் நிறுவனம் தொடங்கப்படவுள்ளதாகவும், அதற்கான முன்னேற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். இத்தொழில் நிறுவனத்தில் தங்களையும் பங்குதாரர்களாக இணைத்துக் கொள்ள விரும்புபவர்கள் திருச்சி திரு கே. சிவநேசன் அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**திருச்சி கே. சிவநேசன்**

**மொபைல் எண். 98424 73497**

**– S. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்**

## ஆமலூருடையார் பங்காளிகள் குலதெய்வ கூட்டு வழிபாடு அன்னதான விழா

ஆமலூருடையார் பங்காளிகளின் குலதெய்வ கூட்டு வழிபாடு, அன்னதான விழா, அரண்மனை நெடுவயல் ஸ்ரீ சிவந்தி விநாயகர் திருக்கோவிலில் பிலவ வருடம் தை மாதம் 4-ஆம் தேதி 17-01-2022 திங்கட்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : வெ. இராஜகோபால், செய்தித் தொடர்பாளர், பொன்னமராவதி.**

**அச்சிட்டோர் : சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்**

534 -ஏ, காமராஜர் சாலை, சிவகாசி - 626123.

போன்:04562-223315 இ.மெயில் suryaprint1998@gmail.com

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றைத் திருத்திஅமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியர்க்கு உரிமை உண்டு. குரலில் வெளியிடப்பெறும் செய்திகளுக்கும் கருத்துகளுக்கும் அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவார்கள். பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - பதிப்பாசிரியர்



# குடும்ப ஒற்றுமை

அன்புடையீர்!

நல் வணக்கம். உலகில் சிக்கல் இல்லாத குடும்பம் இல்லை. சிக்கல்கள், பிரச்சனைகள் இல்லாத குடும்ப வாழ்க்கை இனிக்காது. அதற்காக சிக்கலே, பிரச்சனையே வாழ்க்கை யாகவும் இருந்துவிடக் கூடாது. பிரச்சனைகள், சிக்கல்கள் வரலாம். அது நமது நற்சிந்தனையால் சிதறி ஓட வேண்டும். படகு கரை சேர இரண்டு துடுப்புகள் தேவை. பறவை பறப்பதற்கு இரண்டு சிறகுகள் தேவை. பாரம் உள்ள வண்டியை இழுத்துச் செல்ல இரண்டு மாடுகள் தேவை. துடுப்புகள், சிறகுகள், மாடுகள் இவைகளின் இயக்கங்கள் ஒற்றுமையாக ஒரே மாதிரியாக இருந்தால் தான் படகு கரை வந்து சேரும், பறவையால் எளிதாகப் பறக்க முடியும். வண்டி சீராகச் செல்ல முடியும். அதே போன்று தான் குடும்பமும். குடும்பம் குதூகலமாக விளங்கிட கணவன் மனைவியிடையே ஒற்றுமை தேவை. கடவுளிடத்து பக்தியும், உயிர்களிடத்து கருணையும் தேவைப்படுவது போல குடும்பத்திற்கு ஒற்றுமை தேவை. கணவன் மனைவி உறவில் விட்டுக் கொடுத்தலும், புரிதலும், பக்குவமும் மிகவும் அவசியம். ஒரு பிரச்சனைக்குரிய விசயத்தில் கணவன் மனைவியைப் பார்த்து,“ உன் விருப்பம் போல் செய்” என கூறினால் சிக்கல் வர வாய்ப்பில்லை. அதே விசயத்தில் மனைவி கணவரைப் பார்த்து “உன் விருப்பம் போல செய்து கொள்ளுங்கள்” என்று கூறிவிட்டால் அப்போது தான் சிக்கல் தொடங்குகிறது. கணவன் அறிவு சார்ந்த தடத்தில் அதிக அதிக நாட்டம் கொள்வதும், மனைவி அன்பு சார்ந்த தடத்தில் அதிகம் நாட்டம் கொள்வதும் குடும்ப மேன்மைக்கு வலு சேர்க்கும். உரம் போட்டது போலாகும். கணவன் மனைவி இருவரும் இடையேயுள்ள பிரச்சனைகள் அவ்வப்போது அவர்களுக்குக்குள்ளேயே பொறுமையாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஒருவரைப்

பற்றி ஒருவர் மற்றவரிடம் புறங்கூறினால் புண்ணியம் தேயும். யாரைப்பற்றிப் புறங்கூறுகிறோமோ அவர் செய்துள்ள பாவங்கள் புறங்கூறுபவரை வந்த சேரும் என்பது வேதக் கூற்று. குறையில்லாதவர் எவருமில்லை. குறையுள்ள ஒருவர் மற்றவரைக் குறை சொல்ல உரிமையில்லை. அந்த வேலையை இறைவன் நமக்கு அளிக்கவுமில்லை. நமது நிறை குறைகளைக் கவனிக்க கடவுள் இருக்கிறார். கடவுள் பணியை நாம் கையில் எடுக்காமல் நாம் நமது கடமைகளை சரிவர செய்திட முற்படும் கணவர்கள் மனைவியர்களின் செயலால் வீட்டில் அற்புத அலைகள் பரவும். இல்லத்தில் மகிழ்ச்சி எப்போதும் நிலைத்திடும்.

**குறிப்பு :** நமது சமுதாயத்தில் கணவன் மனைவியிடையே ஏற்பட்ட குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்து சமரசம் செய்து வைக்க மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாகவே இக்கட்டுரை எழுதியுள்ளேன்.

**– தலைவர் & குரல் பதிப்பாசிரியர், கல்வி வளர்ச்சிக் கழகம்**




## பிரான்மலை மங்கைபாகர் கோயில்
# ஆறாம் திருவிழா அறிவிப்பு

| | |
|---|---|
| கொடி ஏற்றம் & காப்புகட்டுதல் | : 7.4.2022 வியாழக்கிழமை |
| திருக்கல்யாண வைபவம் | : 11.4.2022 திங்கள்கிழமை |
| ஆறாம் திருவிழா | : 12.4.2022 செவ்வாய்க்கிழமை |
| தேர்த் திருவிழா | : 15.4.2022 வெள்ளிக்கிழமை |

நகரத்தார்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு இறைஅருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

– அ.வ.ந. பொதுநலச்சங்க நிர்வாகிகள்.



# இதயத்தைக் காப்போம்

நம் உடல் நலனுக்கு - நல்வாழ்வுக்கு அடிப்படையாக பணிபுரிவது இதயம். வயலுக்கு நீர் இறைக்கும் பம்பு போல நம் இதயமானது உடலுக்கு இரத்தத்தை விநியோகிக்கிறது. உடலின் பல பகுதிகளும் நன்கு இயங்க இரத்த ஓட்டம் நன்கு நடைபெற வேண்டும். தூய்மையான இரத்தம் சிறு சிறு இரத்தக் குழாய்களின் வழியே உடலின் பல பாகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதுவே இருதயத்தின் வேலையாகும். இருதயம் இந்த வேலையைச் செய்ய முடியாத நிலை இருதய நோய் எனப்படும்.

பொதுவாக பலருக்கும் இரத்த ஓட்டம்-இருதயம் வாழ்நாள் முழுவதும் சரியாகவே இருக்கிறது என்றாலும் எல்லா யந்திரங்களைப் போன்று இதுவும் காலப் போக்கில் பழுதடைகிறது. ஒரு பகுதியில் இரத்த ஓட்டம் தடைப்பட்டால் உடலின் அந்தப் பகுதிக்குத் தேவையான இரத்தம் கிடைப்பதில்லை. எனவே அப்பகுதி செயலிழக்கிறது. இருதயத்தில், மூளையில், நுரையீரலில், சிறுநீரகங்களில், தோலில் - கை கால்களில் எங்கு வேண்டுமானாலும் இரத்தம் கிடைக்காததால் பழுது ஏற்படலாம். செயலற்றுப் போகலாம். பல்வேறு அடிப்படைகளில் இருதய நோய்கள் வருகின்றன. அவற்றுக்கான காரணங்களும் வேறுபடுகின்றன. இருதயத்திலிருந்து வெளியேறும் ரத்தத்தின் அளவு குறைந்து, சரியாக ரத்தம் வெளியேறாத நிலையில் ஏற்படும் பாதிப்பே ஹார்ட் பெயிலியர் (Heart Failure).

நல்ல பழக்கங்களையும், ஒழுங்கு முறைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம் இருதய நோய்களைத் தவிர்க்கலாம்.

### சரியான உணவுப் பழக்கம்

வயதுக்கும் உயரத்திற்கும் ஏற்ற உடல் எடை இருக்குமாறு பார்த்துக் கொள்வதும், சீரான சரிவிகித உணவு போதுமான அளவு உட்கொண்டு உடல் நலனைக் காத்தலும்

முக்கியமாகும். உடற்பயிற்சியும் அவசியம். உடலுழைப்புக்கு வாய்ப்பற்ற தொழில் செய்வோர் எளிய உடற்பயிற்சி செய்தல் நல்லது. நாள் முழுவதும் உட்கார்ந்த இடத்திலேயே இருந்து தொழில் அல்லது வாணிகம் புரிவோர் அன்றாடம் சிறிது தொலைவு நடத்தல் நல்ல உடற்பயிற்சியாகும். ஆசனப் பயிற்சியும் சாலச் சிறந்தது.

## புகைப் பழக்கத்தைத் தவிர்ப்பது நல்லது :

புகையிலைப் புகையிலுள்ள நிகோடின் எனப்படும் நச்சுப் பொருள் இதயத்துக்கும், இரத்தக் குழாய்களுக்கும் தீமை செய்கிறது. நரம்பு மண்டலத்தையும் பாதிக்கிறது. தீமை தரும் புகைப் பழக்கத்தை விட்டு விடுவது குடும்பத்திற்கு நல்லது.

## மனக்கவலையும், மனச் சுமையும் :

மனநிறைவுடனும், அமைதியுடனும், எதற்கும் அதிர்ச்சி அடையாத தன்மையுடனும், அவசரப்படாத தன்மையுடனும், மனக் கவலைகளை விட்டொழித்து வாழப் பழக வேண்டும். தியானப்பயிற்சியின் மூலம் இது எளிதில் சாத்தியமாகும். மதுப் பழக்கம் மற்றும் புகைப்பழக்கம் அறவே நிறுத்தப்பட வேண்டும்.

## தாராளமாக சேர்த்துக் கொள்ள வேண்டியவை :

வெள்ளைப் பூண்டு, வெங்காயம், வாழைத்தண்டு, வெண்டைக்காய், காரட், கீரை வகைகள், வாழைப்பூ, காலிபிளவர், முள்ளங்கி, தக்காளி, கொத்தவரை, முருங்கைக்காய், வெள்ளரிக்காய், கத்தரிக்காய், புடலங்காய்.

## சேர்க்க வேண்டிய எண்ணெய் வகைகள் :

1. நல்லெண்ணெய் 2. மரபணு மாற்றம் செய்யப்படாத எண்ணெய் வித்துகளிலிருந்து எடுக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய். 3. ஆலிவ் ஆயில்.

## தவிர்க்க வேண்டிய உணவு வகைகள் :

அசைவ உணவைத் தவிர்க்க வேண்டும். ஒருவருக்கு எப்போது சர்க்கரை நோய் வந்துவிட்டதோ அவர் இருதயப் பரிசோதனை கண்டிப்பாகச் செய்து கொள்ள வேண்டும். இதயத்தைக் காப்போம்! இன்பமுடன் வாழ்வோம்!

**- D. பிரியதர்சினி B.Sc., திண்டுக்கல்**

# மகிழ்ச்சியாக வாழக் கற்போம்

மனிதர்கள் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் கவலை கொள்கின்றனர். ஏதாவது ஒரு விஷயம் காரணமாகக் கவலை ஏற்படுகிறது. கவலை ஏன் ஏற்படுகிறது என்று ஊன்றிப் பார்த்தால் நாம் விரும்பும் ஒன்று பூர்த்தி அடையாமல் போனால் கவலை ஏற்படுகிறது.

மாணவன் தேர்வு எழுதி விட்டான் எனில் அதன் முடிவு தெரியும் வரை அவனுக்குக் கவலை ஏற்படுகிறது. சிலர் இந்த வேலை முடியுமா? முடியாதா? என்று கவலைப்படுகின்றனர். சில கவலைகள் பயனுள்ளதாகவும், சில கவலைகள் பயனற்றதாகவும் இருக்கின்றது.

எப்பொழுது நமது மனதில் பயம் தோன்றுகிறதோ அப்போது கவலை பிறக்கிறது. அந்தக் கவலை நமது வாழ்க்கையின் அமைதியை அழித்துவிடுகிறது. விஞ்ஞான நோக்கில் பார்த்தால் கவலை அடைவதால் உடல், மனம் இரண்டும் பாதிப்பு அடைகிறது. குடல்புண், இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற பல நோய்கள் தோன்றி மேலும் வாழ்க்கையைத் துன்பமயமாக்கி விடுகின்றன. கவலை மற்றும் மன அழுத்தம் ஆகியவை இன்று மனிதரிடம் உள்ள பெரிய நோய்கள் ஆகும். கவலைப்படுவதால் எந்த நன்மையும் இல்லை என்பதை நாம் உணர வேண்டும்.

நமது பார்வை எப்படி இருக்கிறதோ அதை ஒட்டியே நமது வாழ்க்கை அமைகிறது என்று கூறுவர். எடுத்துக்காட்டாக மூன்றையும் மூன்றையும் கூட்டும்போது ஆறாகிறது. மூன்றின் பக்கத்தில் மூன்றை எழுதும் போது முப்பத்து மூன்றாகிறது. மூன்றையும், மூன்றையும் பெருக்கினால் ஒன்பதாகிறது. மூன்றில் மூன்றைக் கழித்தால் பூஜ்யமாகிறது.

இது போல நம் அனைவருக்கும் பல துன்பங்கள் வந்த போதும் அதைப் பெருக்கிக் கொள்வதோ அல்லது கூட்டிக் கொள்வதோ கழித்துப் பூஜ்யமாக்கிக் கொள்வதோ நம் கையில்தான் உள்ளது.

எந்த ஒரு சூழ்நிலையையும் நாம் சகஜமாக ஏற்றுக்கொள்ள கற்றுக் கொண்டால் வாழ்க்கை வளம் பெறும். மகிழ்ச்சியாக வாழக் கற்போம்.

**– A. கார்த்திக், மூன்றுமாவடி, மதுரை.**



# பிரான்மலை வாழ்த்து!!

மலை மலை பிரான்மலை!
மங்கை நாயகர் வீற்றிருக்கும் மலை!

அருவியூர் நகரத்தார்க்கு அளித்த மலை!
ஆண்டுக்கு ஒருமுறை வந்து வணங்கும் மலை!

கடல் கடந்து சென்றாலும் சைவத்தைப் போற்றுவோம்!
சமய நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவோம்!

சான்றோரை மதித்திடுவோம்!
எங்கு சென்றாலும் நம்குலத்தோரை உயர்த்திடுவோம்!

நம் சமூக ஒற்றுமையைக் காத்திடுவோம்!
சமுதாய முன்னேற்றத்தை வளர்த்திடுவோம்!

மனமாச்சரியங்களை அறவே ஒழித்திடுவோம்!
நம் இன வளர்ச்சியைப் பேணிக் காப்போம்!

கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு உதவிடுவோம்!
நம் சமூக வளர்ச்சிக்கு வித்திடுவோம்!

மங்கை நாயகரை எந்நாளும் நினைத்திடுவோம்!
மனநிறைவோடு வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம்!

**-C. நாகேஸ்வரி, மதுரை-20**

**பொன்மொழி**

பேசாத வார்த்தைக்கு நீங்கள் எஜமான்
பேசிய வார்த்தைக்கு நீங்கள் அடிமை


ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
1936
ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
பொன்னமராவதி | புதுக்கோட்டை
பட்டின் அற்புத படைப்புகள்
வர்ணதாரா
ஹம்சத்வனி

உ


வாழ்க வளமுடன்

Prop.
ALM. Natarajan

Estd : 2000

96795 57006
90959 06510

GSTIN : 35ABPPN2543RIZX



# வினாயகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ்
# VINAYAGA STEEL INDUSTRIES

**MFG. OF ALL TYPE STEEL FURNITURE & FABRICATIONS**

Plot No. R/56, Industrial Estate, Dolly Gunj, Port Blair - 744 103

Prop.
ALM. Natarajan

Estd : 1994

96795 57006
90959 06510



# வினாயகா ஏஜென்ஸி
# VINAYAGA AGENCY

Commercial Wet Grinders & Motors, Mixer Grinder,
Table Top Grinder, Mixie, Feather Cleaning Machine.



3 & 4, MB No. 195, MG Road, Junglighat, Port Blair - 744 103.

Book Post - Printed Matter

To

From

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளக்ஸ் பின்புறம்,
மெயின்ரோடு ரோடு, **பொன்னமராவதி,**
புதுக்கோட்டை மாவட்டம் - 622 407.

SURYA SVK Cell : 98421 24415